**மத்திய மகாண சபை – 2021 ஆண்டு**

## 1. நிதிக் கூற்றுக்கள்

---------------------

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

---------------------------------

மத்திய மாகாண சபையின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கத் தகவல்களின் பொழிப்பினை உள்ளடக்கிய 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 42 ஆம் இலக்க மாகாண சபைகள் சட்டத்தின் 23(1) ஆம் பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கிணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. மாகாண சபைகள் சட்டத்தின் 23(2) ஆம் பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 11(1) உப பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய பொழிப்பு அறிக்கை 2022 திசெம்பர் 12 ஆந் திகதி வழங்கப்பட்டதுடன் தேசிய கணக்காய்வு சட்டத்தின் 11(2) உப பிரிவின் பிரகாரம் விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2022 திசெம்பர் 15 ஆந் திகதி வழங்கப்பட்டது. அரசியலமைப்புச் சட்டத்தின் 154(6) ஆம் உறுப்புரை மற்றும் தேசிய கணக்காய்வு சட்டத்தின் 10(1) உப பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கும் அறிக்கையின் பிரதி 1987 இன் 42 ஆம் இலக்க மாகாண சபைகள் சட்டத்தின் 23(2) ஆம் பிரிவின் பிரகாரம் மாகாண சபையில் சமர்ப்பிதற்காக ஆளுனருக்கு சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தினை தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மத்திய மாகாண சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

| | கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2020 ஆம் ஆண்டின் நிதிக் குத்தகை முறையின் கீழ் பெற்றுக் கொள்ளப்பட்டு கொடுப்பனவு நிறைவுச் செய்யப்பட்டிருந்த மத்திய மாகாண சபைக்கு கொள்வனவு செய்யப்பட்டிருந்த இன்வொயிஸ் பெறுமதி ரூபா 144,713,400 ஆன 50 கெப் வாகனங்கள் மற்றும் 10 வேன்கள் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதி நிலைமைக் கூற்றில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை. | வாகனங்களின் குத்தகை தவணை செலுத்தி நிறைவு செய்யப்பட்டுள்ளது. அவ் வாகனங்கள் குறித்த அலுவலகத்திற்கு கையளிக்கப்பட்டுள்ளதுடன், அவ் அலுவலகங்களினால் வாகனங்களின் பெறுமதி கணக்கு பொழிப்பு ஊடாக அறிக்கையிடப்பட்ட பின்னர் தகவல்கள் திரட்டப்பட்டு முன்வைக்கப்பட்டுமென தெரிவிக்கின்றேன். | கொடுப்பனவுகள் நிறைவு செய்யப்பட்டுள்ள வாகனங்களின் பெறுமதி நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப்படல் வேண்டும். |
| (ஆ) | புடவைக் கைத்தொழில் திணைக்களத்திற்குச் சொந்தமான ரூபா 11,690,00 ஆன காணிகளின் பெறுமதி மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதிக் கூற்றுக்களில் மற்றும் மத்திய மாகாண சபையின் நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | மதிப்பிடப்பட்ட காணிகளின் ரூபா 11,690,00 ஆன பெறுமதி சிகாஸ் நிகழ்ச்சித் திட்டத்திற்கு சரியாக உட்சேர்ப்பதற்கு முடியாது போனமையினால் அப் பெறுமதி சிகாஸ் நிகழ்ச்சித் திட்டத்திலிருந்து அகற்றுவதற்கு காணிகளின் பெறுமதியான ரூபா 11,690,000 வரவு வைக்கப்பட்டு மீண்டும் செலவு வைக்கப்பட்டதெனவும், அதன் பிரகாரம் கணக்கு குறிப்புக்களில் இரட்டை பதிவு பிழை ஏற்பட்டிருக்கவில்லை. | காணிகளின் பெறுமதி நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | மத்திய மாகாண விவசாய திணைக்களத்தினால் மீளாய்வாண்டினுள் மாகாண பணிப்பாளர் அலுவலகத்திற்கு மற்றும் பிரதி பணிப்பாளர் அலுவலகங்களுக்கு கொள்வனவு செய்யப்பட்டிருந்த ரூபா 7,942,059 ஆன வாகனங்கள், அலுவலக உபகரணங்கள் மற்றும் இயந்திர உபகரணங்கள் திணைக்களத்தின் மற்றும் மத்திய மாகாண சபையின் நிதிக் கூற்றுக்களில் நிதி அல்லாச் சொத்துக்களின் கீழ் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை. | இந்த பெறுமதியில் ரூபா 2,570,752 ஆன சொத்துக்கள் மாகாண அலுவலகங்களிலிருந்து கொள்வனவு செய்யப்பட்டுள்ளதுடன் அச்சொத்துக்கள் 2022 யூலை மாதம் CIGAS நிகழ்ச்சித் திட்டத்தின் ஊடாக கணக்கிடப்பட்டுள்ளது. பிரதி விவசாய அலுவலகங்களுக்கு சொந்தமான எஞ்சிய ரூபா 5,371,307 ஆன சொத்துக்கள் இந்த ஆண்டின் எஞ்சிய காலப்பகுதியினுள் CIGAS நிகழ்ச்சித் திட்டத்தின் ஊடாக கணக்கிடுகின்றேன். | ஆண்டினுள் கொள்வனவு செய்யப்பட்ட அனைத்துச் சொத்துக்களும் நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப்படல் வேண்டும். |
| (ஈ) | மாகாண சுகாதார சேவைகள் திணைக்களத்தின் வேலை மற்றும் பணி முற்பண கணக்கின் தீர்க்கப்படாத ரூபா 1,903,836 ஆன முற்பணம் குறைவாக காண்பிக்கப்பட்டிருந்தமையினால், மீளாய்வாண்டின் திணைக்களத்தின் மற்றும் மாகாண சபைகள் நிதிக் கூற்றுக்களில் நிதி நிலைமைக் கூற்றில் சொத்துக்கள் அப் பெறுமானத்தினால் குறைவாக காண்பிக்கப்பட்டிருந்தது. | வரும் ஆண்டுகளில் நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கும் போது அந்த ஆண்டிற்கு தொடர்புடையதாக தீர்க்கப்படாத கூலி மற்றும் பணி முற்பணம் தொடர்பான அனைத்து தகவல்களும் நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கின்றேன். | கூலி மற்றும் பணி முற்பண கணக்கில் சரியான மீதி நிதி நிலைமைக் கூற்றில் உள்ளடக்கப்படல் வேண்டும். |
| (உ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு மாகாண ஆயுர்வேத திணைக்களத்திற்கு சொந்தமான ஆதனம் உபகரணம் மற்றும் உபகரணங்களின் கூட்டுத்தொகை ரூபா 48,022,381 உம், மாகாண ஆளுனர் அலுவலகத்திற்குச் சொந்தமான ஆதனம் பொறி | • ஆயுர்வேத திணைக்களத்தின் ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் கையகப்படுத்திய மொத்த பெறுமதி ரூபா 73,292,810 ஆகும். அதில் மூலதன சொத்துக்கள் | மாகாண ஆயுர்வேத திணைக்களத்தின் மற்றும் ஆளுனர் அலுவலகத்தின் சரியாக சொத்துக்களின் பெறுமதிகள் இனங்காணப்பட்டு |

மற்றும் உபகரணங்களின் பெறுமதி ரூபா 3,618,853 மற்றும் 11 வாகனங்களின் கிரயம் ரூபா 129,800,000 உம் அந் நிறுவனங்களின் நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தியிராமையினால் மத்திய மாகாண சபை நிதிக் கூற்றிலும் நிதி நிலைமைக் கூற்றிலும் அச் சொத்துக்கள் குறைவாக காண்பிக்கப்பட்டிருந்தது.

கையகப்படுத்தல் மற்றும் கட்டிடங்கள் நிர்மாணிப்பின் கீழ் செலவிடப்பட்டுள்ள பணமாவது ரூபா 37,306,520 ஆகும். நிலையான சொத்துக்கள் கையகப்படுத்தல் உள்ளடங்கலாக ஏனைய அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு தொடர்புடைய செலவினங்களில் சொத்துக்களாக கணக்கிடப்பட வேண்டிய உபகரணங்களின் பெறுமதி ரூபா 30,318,179 ஆக காணப்பட்டதுடன், சொத்துக்கள் பதிவேட்டிற்கு உள்ளடக்கப்படுவதற்கு தேவையற்ற பொருட்களின் பெறுமதி ரூபா 140,670 மற்றும் ஏனைய சேவைகளின் பெறுமதி ரூபா 5,510,343 ஆகும். அதன் பிரகாரம், சொத்துக்களாக கணக்கிடப்பட வேண்டிய உபகரணங்களின் பெறுமதியில் ரூபா 25,270,429 ஆன உபகரணங்கள் சொத்தாக கணக்கிடப்பட்டுள்ளதுடன், மேலும் கணக்கிடப்பட வேண்டிய உபகரணங்களின் பெறுமதி ரூபா 5,047,750 ஆகும்.

கணக்கிடப்படல் வேண்டும்.

- ஆளுனர் ஆலவலகத்தின் 2020 ஆம் ஆண்டினுள் மேற்கொள்ளப்பட்ட கொள்வனவுகளின் பெறுமதி மட்டும் ஆரம்ப மீதியாக உள்ளடக்கப்படல் காரணத்தினால் இந்த வேறுபாடு ஏற்பட்டுள்ளது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்த நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

மாகாண சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் மாகாண திறைசேரி உள்ளடங்களான அந்தந்த நிறுவனங்களின் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் மத்திய மாகாண சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக் கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

---

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

என்னால் துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- நடைமுறையாக விடுபடல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டில் விடுபாடுகள் மோசடிகள் ஏற்படுவதற்கு காரணமாகும்.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு மாகாண சபையின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களின் பொருத்தமான தன்மையை மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்களை பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புகள், உள்ளக கட்டுப்பாட்டிலான முக்கியமான குறைபாடுகள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பில் முகாமைத்துவத்திற்கு அறிவிக்கப்பட்டது.

## 1.5 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரை

### 1.5.1 தலைப்பு 540 – ஆளுனர் செயலாளர் அலுவலகம்

| | கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2009 யூன் 17 திகதிய பொது நிர்வாகச் சுற்றறிக்கை 09/2009 (i) மற்றும் 2021 ஒக்தோபர் 01 திகதிய பொது நிர்வாகச் சுற்றறிக்கை இல 02/2021 (v) இன் 07 ஆம் பந்தியின் பிரகாரம் ஊழியர்கள் சேவைக்கு வருகை தரல் மற்றும் வெளியேறல், பெற்றுக் கொள்ளப்பட்ட விடுமுறைகள் போன்ற தொடர்பாக எழுத்துமூல சான்றுகள் இல்லாது ஆளுனரின் தனிப்பட்ட பதவியணியின் 09 ஊழியர்களுக்கு மீளாய்வாண்டினுள் ரூபா 1,990,147 ஆன சம்பளம் மற்றும் வேதனங்கள் செலுத்தப்பட்டிருந்தது. | கணக்காய்வில் காண்பிக்கப்பட்ட பின்னர் வருகை மற்றும் வெளிச்செல்லல், பெற்றுக் கொள்ளப்பட்ட விடுமுறை போன்றவற்றிற்கு பதிவேடுகள் பேணிச் செல்லப்படுகின்றதுடன் அதன் பிரகாரம் ஊதியங்கள் செலுத்தப்படுகின்றதென தெரிவிக்கின்றேன். | சுற்றறிக்கை பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| (ஆ) அரச பெறுகைகள் வழிக்காட்டி கோவையின் 4.2 வழிக்காட்டியின் பிரகாரம் மீளாய்வாண்டிற்குரியதாக மத்திய மாகாண சபை ஆளுனர் அலுவலகத்தினால் பிரதான பெறுகைகள் திட்டமொன்று அல்லது வருடாந்த விபரமான பெறுகைகள் திட்டமொன்று தயாரிக்கப்படாது ரூபா 3,767,537 இற்கு பொருட்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. | கணக்காய்வினால் காண்பிக்கப்பட்ட பிரகாரம் பெறுகைகள் திட்டம் தயாரிப்பதற்கு 2022 ஆம் ஆண்டில் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதென தெரிவிக்கின்றேன். | பெறுகை வழிக்காட்டி பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

## 1.5.2 தலைப்பு 541 - சபை செயலாளர் அலுவலகம்

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2009 யூன் 17 திகதிய பொது நிர்வாகச் சுற்றறிக்கை 09/2009 (i) மற்றும் 2021 ஒக்தோபர் 01 திகதிய பொது நிர்வாகச் சுற்றறிக்கை இல 02/2021 (v) இன் 07 ஆம் பந்தியின் பிரகாரம் ஊழியர்கள் சேவைக்கு வருகை தரல் மற்றும் வெளியேறல், பெற்றுக் கொள்ளப்பட்ட விடுமுறைகள் போன்றவற்றின் எழுத்துமூல சான்றுகள் இல்லாது மத்திய மாகாண சபையின் தலைவரின் தனிப்பட்ட பதவியணியின் 13 ஊழியர்களுக்காக மீளாய்வாண்டின் போது ரூபா 7,260,274 ஆன சம்பளம் மற்றும் ஊதியங்கள் செலுத்தப்பட்டிருந்தது. | கடந்த ஆண்டுகளைப் போன்று மீளாய்வாண்டிலும் தனிப்பட்ட பதவியணியின் சம்பளங்கள் மற்றும் வேதனங்கள் கொடுப்பனவு செய்யப்பட்டிருப்பது ஒவ்வொரு மாதங்களுக்கும் உரிய தனியார் பதவியணியின் வருகை தொடர்பாக மதி. தலைவர் பெற்றுக் கொடுத்த சான்றின் பிரகாரம் என்பதுடன் 2022 ஆகஸ்ட் 01 ஆம் திகதி தொடக்கம் நடைமுறையில் வரும் வண்ணம் 18 ஆம் பொது மாதிரியின் பிரகாரம் தலைவரின் தனியார் பதவியணியின் வருகை மற்றும் வெளியேறல் அறிக்கையிடப்படுவதற்கு வருகை பதிவேடொன்று பேணிச் செல்வதற்கு ஆலோசனை பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளது. | சுற்றறிக்கை பிரகாரம் வருகை தரல் மற்றும் வெளியேறல் தொடர்பான அறிக்கைகள் பேணிச் செல்லப்படல் வேண்டும். |

### 1.5.3 தலைப்பு 542 – பிரதான செயலாளர் அலுவலகம்

-----------------------------------------------------------

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| மத்திய மாகாண சபை கட்டிடத்தொகுதி அமைந்துள்ள காணி மற்றும் அங்கு அமைந்துள்ள கட்டிடங்கள் மதிப்பிடப்பட்டு மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | மாகாண சபை கட்டிடம் மற்றும் சூழலுக்காக காப்புறுதி பெற்றுக் கொள்வதற்கு பிரதான மதிப்பீட்டாளருக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளதுடன் மதிப்பீட்டு பெறுமதி பெற்றுக் கொண்ட பின்னர் நிதிக் கூற்றுக்களில் அறிக்கையிடப்படுமெனவும் மாகாண சபை கட்டிடத் தொகுதி அமைந்துள்ள காணி முறையாக கையகப்படுத்திய பின்னர் காணிக்குரிய மதிப்பீட்டு பெறுமதி பெற்றுக் கொள்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்படுமென தெரிவிக்கின்றேன். | காணியினை விரைவாக கையகப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியதுடன் காணியின் மற்றும் கட்டிடத்தின் பெறுமதி மதிப்பிடப்பட்டு நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்படல் வேண்டும். |

### 1.5.4 தலைப்பு 545 – மாகாண நிதி முகாமைத்துவம்

-------------------------------------------------------

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| (அ) மாகாண நிதி விதி 116 பிரகாரம் நிலுவை வருமானம் அறவிடல் தொடர்பாக சேகரிக்கப்படும் உத்தியோகத்தர்கள் அது தொடர்பாக கவனத்துடன் மற்றும் அக்கறையுடன் இருக்க வேண்டியதுடன், தேவையான சந்தர்ப்பங்களில் உரிய காலத்தினுள் சட்டங்கள் ஊடாக நடவடிக்கை எடுப்பதற்காக | காண்பிக்கப்பட்டுள்ள விடயங்கள் சரியானதென குறிப்பிடுகின்றேன். சில ஆண்டுகளின் கூட்டுத்தொகையாக கணக்கிடப்படும் நிலுவை குத்தகை தொகை, நிலுவைக் கட்டுப்பாட்டு கணக்கு ஊடாக சமர்ப்பிக்கப்படுவதுடன் | நிதி விதிகள் பிரகாரம் நிலுவை வருமானம் அறவிடப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| ஏற்பாடுகளை வகுத்தலினை பற்றியும் அவர் பொறுப்பு கூற வேண்டிய போதிலும், 05 வருமான விடயங்களின் மீளாய்வாண்டு திசெம்பர் 31 இல் காணப்பட்ட ரூபா 96,651,994 ஆன நிலுவை வருமானம் அறவிடல் தொடர்பாக அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | தங்களால் காண்பிக்கப்பட்டுள்ளவாறு 36 பிரதேச செயலாளர் அலுவலகங்களின் 2021 சனவரி 01 இல் உள்ளவாறு நிலுவை குத்தகை தொகை ரூபா 65.96 மில்லியன் ஆகும். அதன் பிரகாரம் 2021 திசெம்பர் 31 இல் இன்னுமாக அறவிடப்படுவதற்கிருந்த ரூபா 30,189,910 ஆன நிலுவை தொகை கணக்காய்வின் ஊடாக காண்பிக்கப்பட்ட அவதானிப்பு மற்றும் பின்னூட்டல் நடவடிக்கையின் போது இனங்காணப்பட்ட விட்டுவிடுதல்களும் பிரகாரம் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலுவை குத்தகை மீதி ரூபா 29,655,237 என திருத்தப்பட வேண்டுமென குறிப்பிடுகின்றேன். | |
| (ஆ) மீளாய்வாண்டிற்காக ஊள்ளுராட்சி நிறுவனங்களுக்கு பகிர்ந்தளிப்பதற்கு ரூபா 1,764,133,363 ஆன முத்திரைக் கட்டணங்கள் மீளாய்வாண்டினுள் மாகாண சபைக்கு பெற்றுக் கொள்ளப்பட்டிருந்த போதிலும் மாகாண சபையினால் ரூபா 151,549,482 ஆன தொகை அதாவது பெற்றுக் கொள்ளப்பட்ட தொகையில் 8.5 சதவீதம் மட்டும் பகிர்ந்தளிக்கப்பட்டு எஞ்சிய ரூபா 1,612,583,881 ஆன முத்திரைக் கட்டணம் நிறுத்தி | மீளாய்வாண்டினுள் சேகரிக்கப்பட்ட வருமானம் ரூபா 1,764,133,363 இல் 2021 ஆம் ஆண்டினுள் ரூபா 151,549,482 ஆன தொகை மீண்டும் செலுத்தப்பட்டுள்ளது. கொடுப்பனவு செய்யும் போது சொத்துக்கள் உரித்து கையளித்தல் அடிப்படையில் சேகரிக்கப்பட்ட அனைத்து அட்டவணைகளும் ஒவ்வொரு மாவட்ட பதிவாளர்களினால் உள்ளுராட்சி பணிப்பாளருக்கு | உள்ளுராட்சி நிறுவனங்களை சரியான இனங்கண்டு கொடுப்பனவு செய்ய வேண்டும். |

| | | |
|---|---|---|
| வைக்கப்பட்டிருந்தது. அதனுள் குறித்த உள்ளுராட்சி நிறுவனம் தெளிவின்மையின் காரணத்தினால் சேர்க்கப்பட்ட ரூபா 115,989,520 ஆன முத்திரைக் கட்டணமும் உள்ளடக்கப்பட்டிருந்தது. | சமர்ப்பிக்கப்படும். மீளாய்வாண்டினுள் மேற்படி தெளிவின்மை காரணத்தினால் சேகரிக்கப்பட்ட ரூபா 129,739,276 தொகையில் 2022 செப்தெம்பர் 30 இல் ரூபா 13,749,756 தொகை செலுத்தப்பட்டுள்ளது. எஞ்சிய பெறுமானமும் அதற்குரிய அட்டவணை சமர்ப்பித்தல் பிரகாரம் கொடுப்பனவு மேற்கொள்வதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். | |

### 1.5.5 தலைப்பு 548 – மத்திய மாகாண அரசாங்க சேவைகள் ஆனைக்குழு

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2006 திசெம்பர் 05 திகதிய NSCC/3/01 Allowances ஆம் இலக்க தேசிய சம்பளங்கள் மற்றும் ஆளணி ஆனைக்குழுவின் இணைத் தலைவரின் கடிதத்தின் பிரகாரம் மாகாண சேவைகள் ஆனைக்குழுவின் தலைவரின் மற்றும் உறுப்புனர்களின் மாதாந்த கொடுப்பனவு முறையே ரூபா 15,000 மற்றும் ரூபா 10,000 ஆகும். மாகாண பிரதான செயலாளரர்களுக்கு உரைக்கப்பட்ட திறைச்சேரி, நிதி மற்றும் வெகுசன அமைச்சின் 2018 யூலை 18 திகதிய 03/2018 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கையின் (i) ஆ மற்றும் (ii) பந்திகளுக்கு அமைவாக தேசிய | மத்திய மாகாண அரசாங்க சேவைகள் ஆனைக்குழுவின் தலைவர் உட்பட அங்கத்தவர்களுக்கு கொடுப்பனவு செய்தல் தொடர்பாக மத்திய மாகாண ஆளுனர் செயலாளரினால் வழங்கப்பட்ட கடிதங்கள் தொடர்புப்படுத்தப்பட்டன. அதன் பிரகாரம்,<br>I. மத்திய மாகாண ஆளுனரின் செயலாளரினால் வழங்கப்பட்ட பீ/சீ/பீ/2/01/37 மற்றும் 2010 ஒக்தோபர் 06 | 2018 யூலை 18 திகதிய 03/18 ஆம் இலக்க முகாமைத்துவ சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

சம்பளங்கள் மற்றும் ஆளணி ஆனைக்குழுவின் பரிந்துரை மற்றும் பொது திறைச்சேரியின் முன் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்படாது ஆளுனரின் அங்கீகாரத்தின் அடிப்படையில் மீளாய்வாண்டிற்காக மட்டும் தலைவருக்கு மற்றும் உறுப்பினர்களுக்கு ரூபா 1,280,000 ஆன மாதாந்த கொடுப்பனவு மேலதிகமாக செலுத்தப்பட்டிருந்தது.

திகதிய கடிதத்தின் பிரகாரம் முறையே ரூபா 15,000 மற்றும் ரூபா 10,000 ஆகவும்,

II. பின்னர் ஆளுனரின் செயலாளரினால் வழங்கப்பட்ட GCP/10/03/02 மற்றும் 2020 ஒக்தோபர் 21 திகதிய கடிதத்தின் ஊடாக பெற்றுக் கொடுக்கப்பட்ட திருத்தம் பிரகாரம் 2021 சனவரி மாதம் தொடக்கம் முறையே ரூபா 35,000 மற்றும் ரூபா 25,000 முறையே கொடுப்பனவு செய்யப்பட்டுள்ளது. நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சின் செயலாளரின் 2018 யூலை 18 திகதிய 03/2018 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கை ஊடாக அரச துறை பிரிவின் நிறுவனங்களுக்கு பதவியணி ஆட்சேர்ப்பு, அங்கீகரிக்கப்பட்ட பதவியணிக்கு சம்பளம் மற்றும் கொடுப்பனவு செலுத்தல் தொடர்பாக ஆலோசனை கொடுக்கப்பட்டுள்ளதுடன் 1987 இன் 42 ஆம் இலக்க மாகாண சபைகள் சட்டத்தின் 32

| | | |
|---|---|---|
| | மற்றும் 33 உறுப்புரை ஊடாக மாகாண அரசாங்க சேவைகள் ஆனைக்குழு தாபித்தல் மற்றும் 33(5) பிரிவின் கீழ் அரசாங்க சேவைகள் ஆனைக்குழு உறுப்புனர்களுக்கு செலுத்த வேண்டிய சம்பளம் அவ் மாகாணத்திற்கான மாகாண சபையினால் நிர்ணயிக்கப்படுமெனவும் தெரிவிக்கின்றேன். அதன் பிரகாரம் மேற்படி சுற்றறிக்கையின் பிரகாரம் பொது திறைச்சேரியின் முன் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளல் தேவைப்பாடாமை அவதானிக்கப்பட்டதென தெரிவிக்கின்றேன். | |

## 1.5.6 மத்திய மாகாண வலய பொருளாதார அபிவிருத்தி நிறுவனம்

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 2020 நவம்பர் 11 திகதிய மாகாண நிதி விதி 422 (பெறுகைகள் குழு எல்லை திருத்தங்கள்) மற்றும் பெறுகைகள் வழிக்காட்டி கோவையின் 3.5.1 பிரிவுகளுக்கு முரணாக திணைக்கள தலைவரின் அங்கீகரிக்கப்பட்ட எல்லையை மிகைத்து ரூபா 1,587,200 ஆன நேரடி கொள்வனவுகள் (உலர் உணவுப் பொருட்கள்) மேற்கொள்ளப்பட்டிருந்தன. | மாகாண நிதி விதிக் கோவையின் 457(அ) பந்தியில் திணைக்களமொன்றிற்கு தேவைப்படுகின்ற பொருட்கள் பெற்றுக் கொள்வதற்கு அதிகாரமளிக்கும் சாதாரண முறையின் கீழ் பாதுகாப்பு சேவையில் மற்றும் சுத்திகரிப்பு சேவையிலுள்ள | மாகாண நிதி விதி மற்றும் பெறுகைகள் வழிக்காட்டிக் கோவை பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| | 640 ஊழியர்களுக்கு உலர் உணவுகள் பெற்றுக் கொடுப்பதற்காக ரூபா 1,587,200 செலவு செய்யப்பட்டு கண்டி செப்கோ சுபர், வரையறுக்கப்பட்ட மத்திய மாகாண பல்வகை சேவைகள் கூட்டுறவு சங்கத்திலிருந்து, உலர் உணவுகள் கொள்வனவு செய்யப்பட்டன. | |
| (ஆ) நிறுவனத்தில் சேவையில் ஈடுப்படுத்தப்பட்டுள்ள தனிப்பட்ட பதவியணியின் சேவைக்காலம் 2019 ஆகஸ்ட் 01 ஆம் திகதியின் பின்னர் நீட்டிக்கப்படாது 07 உழியர்களுக்காக சம்பளங்கள் மற்றும் வேதனங்களாக ரூபா 5,671,895 ஆன தொகை மற்றும் அதில் 05 ஊழியர்களுக்காக மீளாய்வாண்டின் போது 03 ஆண்டுகளில் கொடுப்பனவு செய்து முடிக்கும் அடிப்படையில் ரூபா 200,000 வீதம் 1,000,000 கடன் தொகை பெற்றுக் கொடுக்கப்பட்டிருந்தது. | வலய பொருளாதார அபிவிருத்தி நிறுவனத்தின் நியதிச்சட்டத்தின் பிரகாரம் நேரடியாக ஆட்சேர்க்கப்பட்ட பதவியணியில் தற்போது கடமையாற்றும் 05 ஊழியர்களுக்காக மட்டும் அவர்களுக்கு தனிப்பட்ட முறையில் இடைக்கால ஏற்பாட்டின் கீழ் பதவிக்காக 2018 ஏப்ரல் 01 தொடக்கம் உள்ளீர்ப்புச் செய்வதற்கு 2018 மே 21 திகதிய 47 ஆம் இலக்க முகாமைத்துவ சபை பத்திரிக்கை ஊடாக தீர்மாணிக்கப்பட்டிருந்தது.<br>இந்த நிறுவனத்தின் ஊழியர்களுக்கு சலுகை அடிப்படையில் பெற்றுக் கொள்ளும் திறன் காணப்படாமையின் காரணத்தினால் உத்தியோகத்தர்களின் கோரிக்கை அடிப்படையில் முகாமைத்து சபையின் அங்கீகாரத்தின் கீழ் ரூபா இரண்டு இலட்சம் கடன் | சேவைக் காலத்தினை நீட்டிக்காது ஊழியர்களுக்காக சம்பளங்கள் செலுத்தல் மற்றும் கடன் வழங்கல் மேற்கொள்ளக் கூடாது. |

| | | |
|---|---|---|
| | தொகை பெற்றுக் கொடுக்கப்பட்டது. அதனால் இந்த 05 உத்தியோகத்தர்களுக்காக தற்காலிக அடிப்படையில் ஆட்சேர்க்கப்பட்ட இரு ஓட்டுநர்களுக்கு சம்பளம் செலுத்தப்பட்டது. | |

**1.5.7 மாகாண நூலக சேவைகள் சபை**

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 1995 இன் 02 ஆம் இலக்க நூலக நியதிச் சட்டத்தின் 17 ஆம் பிரிவு பிரகாரம் மத்திய மாகாணத்தின் நூலக நிதியத்திற்கு தொடர்புடையதாக ஆரம்பத்திலிருந்து இது வரையில் நிதிக் கூற்றுக்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | ஏற்றுக் கொள்கின்றேன். 2022 ஆம் ஆண்டிற்குரியதாக நிதிக் கூற்றுக்கள் தயாரித்து கணக்காய்விற்கு சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமென குறிப்பிடுகின்றேன். | நியதிச் சட்டத்திற்கு அமைவாக நிதிக் கூற்றுக்கள் தயாரித்து கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படல் வேண்டும். |

**1.5.8 தலைப்பு 551 – உள்ளூராட்சி திணைக்களம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) மத்திய மாகாணத்தின், 05 உள்ளூராட்சி நிறுவனங்களினால் 2013 தொடக்கம் 2020 ஆண்டுக்கு இடைப்பட்ட காலத்தினுள் வழங்கப்பட்டிருந்த 05 மிகைக்கட்டண சான்றிதழ்களுக்கு தொடர்புடைய ரூபா 1,943,303 ஆன மிகைக் கட்டணம் உள்ளூராட்சி | தற்போது 05 மிகைக் கட்டணங்களில் ரூபா 1,943,303 அறவிடப்படவுள்ளது. அதாவது,<br>• மாத்தளை பிரதேச சபையின் 02 மிகைக் கட்டணங்களில் மூவரிடமிருந்து ரூபா | மிகைக் கட்டணம் விரைவாக அறவிடப்படல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| நிறுவனங்களினால் மீளாய்வாண்டு இறுதி வரையிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை. | 229,018 உம் மூவரிடமிருந்து ரூபா 119,000 உம் அறவிடப்படவுள்ளது.<br>• மாத்தளை மா.ந.ச – மேன்முறையீட்டு முடிவு இதுவரையில் பெறப்படவில்லை. ரூபா 510,000 அறவிடப்படவுள்ளது.<br>• உடுநுவர பிரதேச சபையிலிருந்து 02 மிகைக் கட்டணங்களில் ரூபா 1,020,465 உம் ரூபா 64,820 உம் அறவிடப்படவுள்ளது. | |
| (ஆ) 47 உள்ளூராட்சி நிறுவனங்களின் அங்கீகரிக்கப்பட்ட ஊழியர் எண்ணிக்கை, உள்ளவாரான ஊழியர் எண்ணிக்கையுடன் ஒப்பிடும் போது அங்கீகரிக்கப்பட்ட ஊழியர் எண்ணிக்கையை மிகைத்த 268 ஊழியர்கள் மற்றும் வெற்றிட ஊழியர் எண்ணிக்கை 1676 ஆக காணப்பட்டதுடன் அதனுள் 15 உள்ளூராட்சி நிறுவனங்களின் செயலாளர்கள் பதவிகள் வெற்றிடங்களாக காணப்பட்டன. | ஏனைய நியமன அதிகாரிகளினால் நியமனங்கள் பெற்றுக் கொடுக்கப்பட வேண்டிய பதவிகளுக்குரிய வெற்றிடங்கள் நிரப்பி தருமாறு பல சந்தர்ப்பங்களில் கோரப்பட்டிருந்த போதிலும் இது வரையில் அவ் வெற்றிடங்கள் நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிராததுடன் பதவிகளின் வெற்றிடங்கள் நிரம்பும் வரையில் பதிற்கடமைக்காக மற்றும் கடமை நிறைவேற்றலானது இலங்கை நிர்வாகச் சேவையின் மற்றும் முகாமைத்துவ சேவையின் உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டுள்ளதென குறிப்பிடுகின்றேன். | வெற்றிடங்கள் நிரப்புவதற்கு மற்றும் சந்தர்ப்பத்திற்கு ஏற்ற வகையில் சபை செயாளர்கள் நியமிக்கப்படு-வதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

### 1.5.9 தலைப்பு 552 – கல்வித் திணைக்களம்

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) நுவரஎலிய வலய கல்வி அலுவலகத்திற்கு சொந்தமான பாடசாலைகளின் 09 ஆசிரியர்களின் தகுதிக்காண் காலம் பூர்த்தி செய்யப்பட்டிருந்த போதிலும், பெறுபேறுகள் உறுதி செய்யப்படாமை மற்றும் தொடர்புடைய ஆவணங்கள் பூர்த்தி செய்யப்படாமையின் அடிப்படையில் கடமை நிரந்தரமாக்கப்படும் உரிய காலம் 2021 நவம்பர் 03 கணக்காய்வு திகதியாகையில் 01 ஆண்டு தொடக்கம் 14 ஆண்டுகள் வரையான கால வீச்சில் தாமதித்திருந்தது. எனினும் இது தொடர்பாக தாபன விதிக் கோவை II ஆம் அதிகாரத்தின் 11.2.3 பிரகாரம் தகுதிக்காண் காலத்தினை நீட்டிப்பதற்கு அல்லது தகுதிக்காண் நியமனத்தினை இரத்து செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கோவைகளின் குறைப்பாடுகள் பூர்த்தி செய்யப்பட்டு வருகின்றமையை தெரிவிக்கின்றேன். | தகுதிக்காண் பருவத்தினை பூர்த்தி செய்த ஆசிரியர்களை நிரந்தரமாக்குவதற்கு அல்லது தகுதிக்காண் காலத்தினை நீட்டிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ஆ) ஹட்டன் வலய கல்வி அலுவலகத்தின் 2019 மே தொடக்கம் திசெம்பர் வரை புதிய சம்பள படிமுறைகளில் நிறுவப்பட்ட 22 ஆசிரியர்களின் ரூபா 1,540,595 ஆன நிலுவை சம்பளம் 2021 ஆகஸ்ட் வரை கொடுப்பனவு செய்யப்பட்டிராததுடன் ஹட்டன் | நிதியேற்பாடு பெறப்பட்டவுடன் கொடுப்பனவு செய்யப்படுமெனவும் விசேட தேவைப்பாடுகள் உள்ள பாடசாலைகளின் ஆசிரியர் வெற்றிடங்கள் உள்ளதெனவும் | நிலுவை சம்பளம் விரைவாக கொடுப்பனவு செய்வதற்கும் சேவை தேவைப்பாட்டின் அடிப்படையில் ஆசிரியர்கள் பணிக்கப்படுவதற்கும் |

| | | |
|---|---|---|
| வலயத்தின் விசேட தேவைப்பாடுகளுள்ள மாணவர்கள் காணப்படும் 04 பாடசாலைகளின் 20 மாணவர்களுக்கு எந்தவொரு ஆசிரியரும் இணைக்கப்பட்டிருக்கவில்லை. | தெரிவிக்கப்பட்டுள்ளது. | நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (இ) ஹங்குரங்கெத வலய கல்வி அலுவலகத்தின் சம்பளம் தயாரிக்கும் பணியில் காணப்பட்ட உத்தியோகத்தரினால் 09 தனியார் வங்கி கணக்குகள் மற்றும் இனங்காணப்படாத 21 கணக்குகள் ஊடாக கூட்டுத்தொகை ரூபா 14,239,939 ஆன ரொதகை தொடர்ச்சியாக 10 ஆண்டுகள் காலப்பகுதியினுள் ஆதனக் கடன் மற்றும் மீதி சம்பளங்கள் பயன்படுத்தப்பட்டு வலய கல்வி பணிப்பாளரின் மக்கள் வங்கியில் பேணிச் செல்லப்படுகின்ற மாகாண சபைகள் நடைமுறைக் கணக்கின் ஊடாக பிழையாக பயன்படுத்தப்பட்டிருந்தது. இந்த தொகையில் 2022 செப்தெம்பர் 07 ஆம் திகதியாகையில் ரூபா 3,696,920 ஆன தொகை இன்னுமாக அறவிடப்படுவதற்கிருந்தது. | சம்பளங்கள் தயாரிக்கும் போது மோசடியொன்று ஏற்பட்டுள்ளமை வெளிப்படுத்தப்பட்டதுடன், விரைவாக அது தொடர்பில் மத்திய மாகாணத்தின் பிரதான செயலாளருக்கு தெரிவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு நி.பி 104(3) பிரகாரம் பரிசோதனையொன்று மேற்கொள்வதற்கு ஆலோசனை பெற்றுக் கொடுக்கப்பட்டது. அதன் பிரகாரம் ரூபா 10,423,348 ஆன பிரதான செயலாளரின் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட்டு அத் தொகை மோசடி மேற்கொண்ட நபரிடமிருந்து ரூபா 10,543,018 ஆன தொகை அறவிடப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.<br><br>பிரதான செயலாளரினால் இது தொடர்பாக அடிப்படை புலனாய்வொன்று மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டதுடன், அப் | மோசடி செய்த மொத்த தொகையும் அறவிடப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியதுடன் அதற்கு பொறுப்பு கூற வேண்டிய தரப்பினருக்கு எதிராக சட்டம் கடுமையாக செயல்படுத்தப்பட வேண்டும். |

புலனாய்வின் பிரகாரம் ரூபா 14,239,939 ஆன தொகை அல்லது அதற்கு கிட்டிய தொகையொன்று மோசடி செய்யப்பட்டள்ளமை வெளிப்படுத்தப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் தவறாக பயன்படுத்தியுள்ளதென வெளிப்படுத்தப்பட்டுள்ள மொத்த தொகையில் இன்னுமாக அறவிடப்படுவதற்குள்ள ரூபா 3,696,920 ஆன தொகை மாகாண கல்வித் திணைக்களத்திற்கு செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு குறித்த உத்தியோகத்தருக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த மோசடி மேற்கொண்ட உத்தியோகத்தரினால் தவறாக தொகை செலவு வைக்கப்பட்டிருந்த ஆசிரியர் சேவையின் உத்தியோகத்தரான அவரின் மனைவியின் மற்றும் வலய அலுவலகத்தின் அலுவலக பணியாளரின் கடமை தடை செய்யப்பட்டுள்ளதுடன், அது தொடர்பாக ஒழுக்காற்று நடவடிக்கைகள் மேற்கொள்வதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றமையை தெரிவிக்கின்றேன்.

| | | |
|---|---|---|
| (ஈ) மத்திய மாகாண கல்வித் திணைக்களத்தினால் 2016 ஆம் ஆண்டில் கொள்வனவு செய்யப்பட்ட KDH ஹய்ரூப் வாகனங்கள் 03 இற்காக வாகனங்கள் முகவர் நிறுவனமான டொயோடோ இலங்கை தனியார் கம்பனியிலிருந்து மேம்பாட்டு பணியாக பெற்றுக் கொடுக்கப்பட்டிருந்த குளிர்சாதன பெட்டி (Cool Box) 3 இல் மீளாய்வாண்டு இறுதியின் போது 2 குளிர்சாதன பெட்டிகள் காணாமல் போயிருந்ததுடன் அது தொடர்பாக தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | CPNC -5565 ஆம் இலக்க வாகனத்திற்கு உரிய குளிர்சாதனப் பெட்டி அவ் வாகனத்தில் பொருத்தப்பட்டுள்ளதுடன், CPNC–6051 மற்றும் CPNC–5564 இலக்கங்களையுடைய இரண்டு வாகனங்களுக்குரிய 02 குளிர்சாதனப் பெட்டிகள் காணாமல் போனமைக்கு அடிப்படை பரிசோதனை பிரகாரம் உறுதி செய்யப்பட்டுள்ளமையினால் நி.பி 104(4) பிரகாரம் பரிசோதனையொன்று மேற்கொண்டு மேல் நடவடிக்கைகள் எடுப்பதற்கு பரிந்துரை செயய்ப்பட்டு அதற்காக பரிசோதனை சபையொன்று நியமிக்கப்பட்டிருக்கவில்லை. | காணாமல் போன பொருட்கள் முறையான பரிசோதனையொன்று மேற்கொள்ளப்பட்டு நட்டத்தினை அறவிட்டுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (உ) மாகாண கல்வித் திணைக்களத்தினால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் திணைக்களங்களுக்கு இணைக்கப்பட்ட வாகனங்களுக்கு நேர்ந்த 70 விபத்துக்களுக்குரிய மொத்தம் ரூபா 5,268,674 ஆன நட்ட சேதங்கள் தொடர்பாக, விபத்துக்கள் நேர்ந்து 01 ஆண்டு உம் 15 ஆண்டுகளும் இடைப்பட்ட காலம் கடந்திருந்த போதிலும் அது தொடர்பாக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 15 நிகழ்வுகளின் பரிசோதனை நடவடிக்கைகள் நிறைவு செய்யப்பட்டிருந்த போதிலும் மிகைக் கட்டணங்கள் அறவிடப்படுவதற்கு முடியாதுள்ளது. | விபத்துக்கள் தொடர்பாக விரைவாக நடவடிக்கை எடுக்கப்பட்டு நட்ட சேதங்கள் அறவிடப்படல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| (ஊ) மாகாண கல்வித் திணைக்களத்தின் ஹட்டன் வலயத்திற்கு சொந்தமான 147 பாடசாலைகயில் 121 பாடசாலைகள் அமைந்துள்ள அரச இல்லங்கள் 297 இல் 28 சிதைந்த நிலையில் காணப்பட்டதுடன் 62 விளைவற்று காணப்பட்டன. | சிதைந்த நிலையில் காணப்படுகின்ற உத்தியோகப்பூர்வ இல்லங்கள் பயன்பாட்டிற்கு எடுக்கக்கூடிய உத்தியோகப்பூர்வ இல்லங்களாக மாற்றுவதற்கு பிரதான செயலாளர் அலுவலகத்திலிருந்து தகவல்கள் அழைக்கப்பட்ட பிரகாரம், காணப்பட்ட 28 உத்தியோகப்பூர்வ இல்லங்களில் 20 தொடர்பாக தகவல்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. ஹட்டன் வலயத்தில் உத்தியோகப்பூர்வ இல்லங்களுக்காக ஏதும் விண்ணப்பங்கள் முன்வராமையினால் கணக்காய்வு ஐயவினாக்களில் குறிப்பிடப்பட்டுள்ள 62 உத்தியோகப்பூர்வ இல்லங்கள் இன்னுமாக விளைவற்று காணப்படுகின்றதென தெரிவிக்கின்றேன். | சிதைந்த இல்லங்கள் விரைவாக பழைய நிலைக்கு கொண்டு வர வேண்டியதுடன் விளைவற்று காணப்பட்ட இல்லங்கள், பயனுள்ளதாக பயன்பாட்டிற்கு எடுக்கப்படல் வேண்டும். |
| (எ) மாகாண கல்வித் திணைக்களத்தின் வத்தேகம வலய கல்வி அலுவலகத்திற்கு சொந்தமான மப/வத்/லுனுகெடியாமடித்த பாடசாலை மற்றும் மப/வத்/கெஹெலிய ரம்புக்வெல்ல முதன்மை பாடசாலைக்கு நியமனம் பெற்ற நிபுணத்துவம் அற்ற சேவையின் இரு ஊழியர்கள் அப் | ஐயவினாவில் குறிப்பிடப்பட்டுள்ள நிபுணத்துவம் அற்ற சேவையின் இரு ஊழியர்களுக்கு பிரதான மற்றும் கல்வி அமைச்சின் செயலாளரினால் மப/வத்/கெஹெலிய ரம்புக்வெல்ல முதன்மை | ஆட்சேர்க்கப்பட்ட நோக்கத்திற்கு அமைவாக கடமையில் ஈடுப்படுத்தப்படல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| பாடசாலைகளின் கடமைகளில் ஈடுப்படுத்தப்படாது, முறையே 2014 யூலை மாதம் மற்றும் 2018 செப்தெம்பர் மாதம் தொடக்கம் மத்திய மாகாண பிரதான அமைச்சிற்கு சொந்தமான மாகாண மத்திய அலகிற்கு இணைக்கப்பட்டு, 6 ஆண்டுகளும் 3 ஆண்டுகளும் இடைப்பட்ட காலமாக மேற்படி பாடசாலைகளின் சம்பள பதிவேடுகளில் மீளாய்வாண்டு திசெம்பர் வரை முறையே ரூபா 3,043,724 மற்றும் ரூபா 951,575 என மொத்தம் ரூபா 3,995,299 ஆன சம்பளம் செலுத்தப்பட்டிருந்தது. | பாடசாலைக்கு மற்றும் மப/வத்/லுனுகெடியாமடித்த பாடசாலைக்கு நியமனம் பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளதுடன், பிரதான அமைச்சு செயலாளரின் கடிதத்தின் ஊடாக மத்திய மாகாண அலகிற்கு மற்றும் பிரதான அமைச்சின் நெநோதா பிரிவிற்கு இணைக்கப்பட்டுள்ளதுடன், அதன் பிரகாரம் நிரந்தர சேவை தளத்திலிருந்து சம்பளம் செலுத்தப்பட்டுள்ளதென தெரிவிக்கின்றேன். | |
| (ஏ) கடுகஸ்தொட, கொத்மலை மற்றும் ஹகுரங்கெத வலய கல்வி அலுவலகங்கள் 03 இற்கு சொந்தமான 134 பாடசாலைகளில் முதன்மை ஆசிரியர் வெற்றிடங்கள் 170 காணப்பட்டதுடன், கொத்மலை மற்றும் ஹங்குராங்கெத வலய கல்வி அலுவலகங்கள் 02 இற்கு சொந்தமான 38 பாடசாலைகளில் முதன்மை ஆசிரியர்களின் மிகை 67 ஆகும். இந்த மிகை, வெற்றிடங்கள் காணப்படும் பாடசாலைகளுக்கு மாற்றப்படுவதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | மத்திய மகாகாணத்திற்காக 29747 ஆன கல்வி பதவியணியொன்று அங்கீகரித்திருப்பது, 01/2016 ஆம் இலக்க சுற்றறிக்கை பிரகாரம் 2018 ஆம் ஆண்டிலாகும். அப்போதிருந்த மாணவர்கள் எண்ணிக்கையை அடிப்படையாகக் கொண்டு பாடசாலைகளாக இன்றி வலயத்திற்கான மொத்த ஆசிரியர் எண்ணிக்கை எனவாகும். அவ் அங்கீகரிக்கப்பட்ட பதவியணி தற்போது பாடசாலைகளில் காணப்படுகின்ற பிரயோக ஆசிரியர் தேவைப்பாட்டுடன் இணங்காமையினால், ஒரே | முதன்மை ஆசிரியர் தேவைப்பாடு குறித்து கவனித்து வலயங்களில் ஆசிரியர்களை இணைக்கப்படுதல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| | வலயத்தினுள் பாடசாலைகளின் ஆசிரியர் வெற்றிடங்கள் மற்றும் ஆசிரியர் மிகை உருவாகியுள்ளது. கல்வி பதவியணி நிச்சயிப்பதற்காக கல்வி அமைச்சினால் வெளியிடப்பட்ட 06/2021 சுற்றறிக்கை பிரகாரம், 2021 மே மாதத்தில் காணப்பட்ட மாணவர் எண்ணிக்கையின் அடிப்படையில் கல்வி பதவியணி நிச்சயிக்கப்பட்டு அங்கீகரிப்பதற்காக தற்போது முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திற்கு முன்வைக்கப்பட்டுள்ளது. அப் பாடசாலைக்குரிய கல்வி பதவியணி அங்கீகரிக்கப்பட்ட பின்னர் இன்னுமாக பாடசாலையொன்றில் மிகை ஆசிரியர்கள் காணப்படும் திறனில்லை என தெரிவிக்கின்றேன். | |
| (ஐ) கண்டி மற்றும் நுரவஎலிய மாவட்டங்களில் 08 வலய பாடசாலைகளில் 284 அதிபர்கள் வெற்றிடங்கள் நிரப்பப்படாது அதிபர் பதவியில் கடமை மேவுகைக்காக ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டிருந்ததுடன் மேற்படி 08 வலய அலுவலகங்களில் 03 அலுவலங்கங்களுக்குரிய பாடசாலைகளில் மிகையாக 122 | மத்திய மாகாணத்திற்காக நியமிக்கப்பட்டு அனுப்பப்படுகின்ற அதிபர் தரத்திலானவர்கள் இணைக்கப்படாலனது மத்திய மாகாண கல்வி அமைச்சினால் மேற்கொள்ளப்படுகின்றது. 2021 மே 31 இல் 15 வலயங்களுக்குரிய சிங்கள | அதிபர் தரத்திலுள்ளவர்களை சரியாக இணைக்கப்படல் வேண்டும். |

அதிபர்கள் சேவையில் ஈடுப்படுத்தப்பட்டிருந்தனர்.

மொழி அதிபர்கள் வெற்றிடங்கள் 325 மற்றும் தழில் மொழி அதிபர் வெற்றிடங்கள் 250 உம் காணப்பட்டன. இந்த பாடசாலைகளில் அதிபர்கள் பதவிகள் வெற்றிடமாகும் போது வேறு அதிபர் தரத்தினையுடையவர் இணைக்கப்படுவதற்கு முடியாத சந்தர்ப்பத்தில், பாடசாலையில் காணப்படுகின்ற பொருத்தமான சிரேஷ்ட அசிரியர் அதிபர் பதவியில் பதிற்கடமைக்காக நியமிக்கப்பட், மாணவர்களின் கல்வி செயன்முறை தொடர்ச்சியாக பேணிச் செல்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

2021 திசெம்பர் 29 ஆந் திகதி வரிசை அமைச்சின் அறிவிப்பின் பிரகாரம், அதிபர் தரத்திலானவர்கள் ஆட்சேர்ப்பிற்காக விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளதுடன், அதனூடாக மத்திய மாகாணத்திற்காக 335 சிங்கள மொழியில் மற்றும் 279 தமிழ் மொழியில் என 614 அதிபர் தரத்திலானவர்கள் ஆட்சேர்க்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

## 1.5.10 தலைப்பு 553 – மாகாண காணித் திணைக்களம்

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மாகாண காணித் திணைக்களம் 58 பாடசாலைகளின் காணிகளை சுவீகரிப்பதற்காக 2010 ஆம் ஆண்டு தொடக்கம் மீளாய்வாண்டு வரை 21 பிரதேச செயலாளர் அலுவலகங்களுக்கு ரூபா 62,342,772 ஆன தொகை செலுத்தப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டு இறுதி வரையிலும் சுவீகரித்தல் நடவடிக்கை நிறைவு செய்யப்பட்டிருக்கவில்லை. | ஐயவினாவில் குறிப்பிடப்பட்டுள்ள பாடசாலைகளில், காணி சுவீகரிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. | சுவீகரிப்பு நடவடிக்கைகள் விரைவாக நிறைவுச் செய்யப்படல் வேண்டும். |

## 1.5.11 தலைப்பு 555 – மாகாண பொறியியல் சேவைத் திணைக்களம்

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) மாகாண பொறியியல் சேவைகள் திணைக்களத்தின் 13 பதவிகளுக்குரிய 51 வெற்றிடங்கள் காணப்பட்டதுடன் அங்கீகரிக்கப்படாத பதவியொன்றும் உள்ளடங்கலாக 02 பதவிகளுக்காக 06 உத்தியோகத்தர்கள் மிகையாக காணப்பட்டனர். | 2022 செப்தெம்பர் 30 திகதியாகையில் அங்கு வெற்றிடங்கள் 51 ஆக காணப்பட்டது. திணைக்களத்தின் 2021 திசெம்பர் 31 ஆந் திகதியாகையில் தொழிநுட்ப சேவை உத்தியோகத்தர் (சிவில்) விசேட தரத்தின் 03 பதவிகள் மற்றும் தொழிநுட்ப சேவை உத்தியோகத்தர் (சிவில்) l/ll/lll தரத்தின் பதவிகள் 15 வெற்றிடங்களாக காணப்பட்டமையினால் பொது நிர்வாகச் சுற்றறிக்கை 03/2018 கீழ் ஒப்பந்த | வெற்றிட பதவிகள் நிரப்புவதற்கும், மிகையான பதவியணி அங்கீகரிக்கப்படுவ-தற்கும் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

அடிப்படையில் தொழிநுட்ப தரத்தின் பதவிகள் 02 மற்றும் 11 தொழிநுட்ப உத்தியோகத்தர்கள் ஆட்சேர்க்கப்பட்டுள்ளனர். எனினும் தற்போது ஒப்பந்த அடிப்படையில் இருப்பது 01 உத்தியோகத்தர் மட்டுமாகும். இடமாற்றல் கொள்கையினுள் நிரந்தர உத்திடீயாகத்தர்கள் வருகைத்தந்த பின்னர் அவ் உத்தியோகத்தர்களின் சேவை இரத்து செய்யப்படுமென தெரிவிக்கின்றேன்.
2022 பெப்ரவரி 28 ஆந் திகதியாகையில் அபிவிருத்தி உத்தியோகத்தர் அங்கீகரிக்கப்பட்ட பதவியணி 31 என்றாலும் 37 நபர்கள் பெற்றுக் கொடுக்கப்பட்டிருந்தனர். முகாமைத்துவ சேவைகள் உத்தியோகத்தர் சேவையின் 05 பற்றாக்குறை காணப்பட்டமையினால், அப் பற்றாக்குறை அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் ஊடாக தவிர்த்துக் கொள்ளப்பட்டுள்ளது.
ஆய்வுக்கூட பணியாளர் பதவிகள் அங்கீகரித்துக் கொள்வதற்காக முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திற்கு 2021 மே 10 திகதிய கடிதத்தினூடாக கோரப்பட்டுள்ளன.

| | | |
|---|---|---|
| (ஆ) மத்திய மாகாணத்தினுள் செயல்படுத்தப்படுகின்ற நிர்மாணிப்பு செயற்திட்டங்களை புலனாய்வு செய்து அவற்றின் தரப் பரீட்சை, தரம் மற்றும் நேர்ந்துள்ள மோசடிகள் வெளிப்படுத்தப்பட்டு அரசிற்கு ஏற்பட்டுள்ள நட்ட சேதங்களை இனங்கண்டு அது தொடர்பாக அறிக்கையிடுவதற்காக, 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 40 ஆம் பிரிவின் பிரகாரம் மாகாண பொறியியல் சேவைகள் திணைக்களத்தினால் நல் தொழில்சார் தகைமையுடைய உத்தியோகத்தர்களினாலான உள்ளக கணக்காய்வு பிரிவொன்றினை தாபிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பொறியியல் சேவை திணைக்களத்தின் 18 தொழிநுட்ப உத்தியோகத்தர்கள் பதவி வெற்றிடங்கள் காணப்படுகின்றமையினால் உள்ளக கணக்காய்வு பிரிவிற்காக புலனாய்வு உத்தியோகத்தர்கள் நியமிக்கப்படல் கடினமாகவிருந்தது. எதிர்காலத்தில் உள்ளக புலனாய்வு நடவடிக்கைகளுக்காக உத்தியோகத்தர்கள் ஒதுக்கப்பட்டு அப் பிரிவிற்காக பணிக்கப்படுவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. | உள்ளக கணக்காய்வு பிரிவொன்று தாபிக்கப்படல் வேண்டும். |

## 1.5.12 தலைப்பு 557 – மத்திய மாகாண கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களம்

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களத்தின் கூட்டுறவு நிதியில் 08 சங்கங்களுக்காக 1991 தொடக்கம் 2016 ஆம் ஆண்டு வரை காலப் பகுதியினுள் பெற்றுக் கொடுக்கப்பட்டிருந்த ரூபா 2,945,813 ஆன கடன் தொகையில், மீளாய்வாண்டு இறுதியில், 05 ஆண்டு தொடக்கம் 20 ஆண்டுகள் வரையான காலம் கடந்திருந்த ரூபா 2,514,188 ஆன கடன் அறவிடப்பட்டிருக்கவில்லை. | 06 செயலற்ற சங்கங்கள் காணப்பட்டதுடன் 2022 ஆகஸ்ட் 25 ஆந் திகதி நடைப்பெற்ற மாகாண கணக்காய்வு குழுவின் தீர்மானத்தின் பிரகாரம் சங்கங்களின் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் மீண்டும் மீளாய்வு செய்யப்பட்டு கடன் தீர்க்கும் திறன் கருத்திற் கொள்ளுமாறு | விரைவில் கடன் தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| | செயலாளரினால் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் 2022 ஒக்தோபர் 18 திகதிய கடிதத்தின் ஊடாக மாவட்ட ஆனையாளர்களுக்கு பொறுப்புக்கள் பணிக்கப்பட்டுள்ளன. ஒரு சங்கமொன்றின் சொத்துக்கள் கையேற்கப்பட்டு கலைக்கப்பட்டு சொத்துக்கள் விற்கப்பட்டு பெறப்படும் பணத்தில் கடனை தீர்த்துக் கொள்வதற்கும் உடுதும்பர பல்சேவை சங்க கடன் தொகையில் நிர்மாணிக்கப்பட்ட கட்டிடத்தின் சட்டரீதியான சிக்கல் தீர்க்கப்பட்டதன் பின்னர் கட்டிடத்தின் வருமானத்தில் செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமெனவும் நுவரஎலிய விவசாய கூட்டுறவு சங்கத்திற்கு கடன் தொகையை செலுத்துமாறும் தெரிவிக்கப்பட்டுள்ளது. | |

## 1.5.13 தலைப்பு 561 – மத்திய மாகாண சுகாதார சேவைகள் திணைக்களம்

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 2004 ஒக்தோபர் 11 திகதிய 118 ஆம் இலக்க தேசிய பாதீட்டு சுற்றறிக்கை பிரகாரம் இடமாற்றப்பட்டு சென்ற உத்தியோகத்தர்களின் கடன் மீதி 03 மாதங்களின் பின்னரும் இடமாற்றப்பட்டு வருகைத் தந்த | இந்த திணைக்களத்திலிருந்து ஓய்வுப் பெற்ற 164 உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய மொத்தம் ரூபா 2,947,542 ஆன கடன் மீதியில் 15 உத்தியோகத்தர்களின் ரூபா | தேசிய பாதீட்டு சுற்றறிக்கை பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியதுடன் ஓய்வு பெற்ற |

| | | | |
|---|---|---|---|
| | உத்தியோகத்தர்களின் கடன் மீதி 02 மாதங்களின் பின்னரும் காணப்படாத வண்ணம் தீர்க்கப்பட வேண்டிய போதிலும் மாகாண சுகாதார சேவைகள் திணைக்களத்தினால் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மத்திய மாகாண சபையினுள் மற்றும் வேறு அமைச்சுக்கள்/திணைக்களங்கள், உள்ளூராட்சி நிறுவனங்கள் மற்றும் வேறு நிறுவனங்களுக்கு இடமாற்றப்பட்டு சென்ற 422 உத்தியோகத்தர்களின் மொத்தம் ரூபா 21,117,773 ஆன கடன் மீதி மற்றும் இடமாற்றப்பட்டு வந்த 345 உத்தியோகத்தர்களின் கடன் மீதி மொத்தம் ரூபா 20,326,816 ஆன தொகை 03 மாதங்கள் தொடக்கம் 05 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலம் வரை தீர்க்கப்பட்டிராததுடன் ஓய்வுப் பெற்ற 164 உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய கூட்டுத்தொகை ரூபா 2,947,542 ஆன கடன் மீதி 03 மாதங்கள் தொடக்கம் 30 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலம் கடந்திருப்பினும், அவர்களின் ஓய்வூதிய பணிக்கொடையிலிருந்து அறவிடப்பட்டிருக்கவில்லை. | 400,209 ஆன தொகை தற்போது அறவிடப்பட்டுள்ளதுடன் இன்னுமாக 149 ஆன உத்தியோகத்தர்களிடமிருந்து ரூபா 2,547,333 ஆன தொகை தீர்க்கப்படுவதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றதென தெரிவிக்கின்றேன். | உத்தியோகத்தர்களின் கடன் மீதி ஓய்வு பணிக்கொடையிலிருந்து அறவிடப்படல் வேண்டும். |
| (ஆ) | நாவலபிடிய மாவட்ட வைத்தியசாலையின் மீளாய்வாண்டின் திசெம்பர் மாதம் வங்கி இணக்க கூற்றின் பிரகாரம் 2019 ஆம் ஆண்டு தொடக்கம் | 2013 ஆம் ஆண்டு தொடக்கம் வங்கி இணக்க கூற்று மீண்டும் தயாரிக்கப்படுகின்றமையினால் வங்கி இணக்க கூற்றில் | வங்கி இணக்க கூற்றின் வேறுபாடு இனங்காணப்பட்டு மேல் நடவடிக்கை எடுக்கப்படல் |

| | | | |
|---|---|---|---|
| | முன்கொண்டு வரப்படுகின்ற ரூபா 3,901,263 ஆன “இன்னுமான வங்கி இணக்க கூற்றின் வித்தியாசம்” மீளாய்வாண்டின் போது தீர்க்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | காணப்படும் வித்தியாசம் 2022 திசெம்பர் 31 ஆந் திகதி சீர் செய்து தருமாறு நாவலப்பிடிய மாவட்ட வைத்தியசாலையின் கணக்காளரின் 2022 ஒக்தோபர் 25 திகதிய கடிதத்தின் ஊடாக தெரிவிக்கப்பட்டுள்ளது. | வேண்டும். |
| (இ) | 2016 தொடக்கம் 2021 வரையான காலப்பகுதியினுள் மாகாண சுகாதார பணிப்பாளர் அலுவலகத்தின் சம்பள பிரிவில் கடமையாற்றும் இரு உத்தியோகத்தர்களினால் சம்பளம் செலுத்தும் போது, அவர்களின் மற்றும் கிட்டியவர்களின் தனிப்பட்ட வங்கி கணக்குகள் 14 இற்கு ரூபா 51,961,088 மற்றும் வங்கி கணக்கு இலக்கத்தின் ஊடாக உறுதி செய்யப்படாத ரூபா 1,077,550 என மொத்தம் ரூபா 53,038,638 ஆன தொகை தவறாக மாற்றப்பட்டிருந்தது. சம்பள பட்டியல்களுக்கு தொடர்புடைய கோவைகள் மற்றும் ஆவணங்கள் கணினி மென்பொருள் காப்பு (Backup) முறையாக மற்றும் முழுமையாக முன்வைக்காமை மற்றும் கடவுச் சொல் மறத்தல், தொழிநுட்ப குறைப்பாடுகள் காணப்பட்டமையினால் 02 கணினிகளின் காப்புகளுக்கு (Backup) அணுகுவதற்கு முடியாமையினால் அக் காலப் பகுதிக்குரியதாக மோசடி | கண்டி பிரதேச சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்தில் நேர்ந்துள்ள நிதி மோசடி தொடர்பாக தற்போது சம்பள பட்டியல் கடமையாற்றிய இரு உத்தியோகத்தர்களின் சேவை இடைநிறுத்தப்பட்டுள்ளதுடன், குற்றப்புலனாய்வு திணைக்களம், தேசிய கணக்காய்வு அலுவலகம், சுகாதார அமைச்சின் உள்ளக கணக்காய்வு பிரினால் புலனாய்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றமையை குறிப்பிடுகின்றேன். அவ்வாறே, இந்த நிகழ்விற்கு தொடர்புடைய உத்தியோகத்தர்களை இனங்காணுவதற்காக மத்திய மாகாண பிரதான செயலாளர் அலுவலகத்தின் உடாக நி.பி 104(4) புலனாய்வொன்றும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றமையை மேலதிகமாக குறிப்பீடுகின்றேன். | பரிசோதனை தொடர்ச்சியாக நடத்தப்பட்டு பொறுப்பு கூற வேண்டியவர்கள் இனங்காணல் மற்றும் மோசடி செய்யப்பட்ட தொகையை தீர்மானிக்கப்பட்டு அறவிடப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| செய்யப்பட்டுள்ள முழுத்தொகை உறுதியாக இனங்காணல் பிரச்சினைக்குரியதாகும். | | |
| (ஈ) ஔடத தேவைப்பாடு இனங்காணப்பட்டு கட்டளையிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாமையினால் ஔடத மிகை, தேவைப்பாடு உடைய வைத்தியசாலைகள் இனங்கண்டு பகிர்ந்தளிப்பதற்கு அல்லது வைத்திய வழங்கல் பிரிவினை தொடர்புக் கொண்டு அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்காமையின் காரணத்தினால், மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு கண்டி வைத்திய வழங்கல் பிரிவின், கண்டி மார்பு வைத்தியசாலையில் மற்றும் மாத்தளை பொது வைத்தியசாலையில் ரூபா 15,414,781 ஆன ஔடத இருப்பு காலாவதியாகி 03 ஆண்டுகள் தொடக்கம் 14 ஆண்டுகள் காலப்பகுதி கடந்திருந்தது. அவ்வாறே மேற்படி காலாவதியாவதற்கு அண்மையாக ரூபா 10,426,052 ஆன ஔடதம் காணப்படுகின்றமை அவதானிக்கப்பட்டது. | **<u>கண்டி பிரதேச சுகாதார பணிப்பாளர் அலுவலகம்</u>**<br>2021 ஆம் ஆண்டில் நிலவிய கொவிட் தொற்று நிலையினால் மதிப்பிடப்பட்ட அளவிற்கு ஔடதத்திற்காக கேள்வி இல்லாமை மற்றும் நோயாளிகள் குறைந்தமை மற்றும் கிளினிக்கள் நடத்தப்படாமையினால் ஔடத இருப்பு எஞ்சியதெனவும்,<br>**<u>கண்டி மார்பு சிகிச்சை நிலையம்</u>**<br>கொவிட் 19 தொற்று நிலையினால் வைத்தியசாலைகளுக்கு நோயாளிகள் வருகைத்தரல் குறைகிந்தமையின் காரணத்தினால் வைத்தியசாலைகளிலிருந்து ஔடதம் வழங்கல் குறைந்தமையினால் காலாவதியாவதற்கு அண்மித்த ஔடதங்கள் பெற்றுக் கொள்ளல் ஏனைய வைத்தியசாலைகளில் நிராகரித்தமையினால் எஞ்சியதெனவும்,<br>**<u>மாத்தளை பொது வைத்தியசாலை</u>**<br>2022 ஆம் ஆண்டு தொடக்கம் மாத்தளை மாவட்டத்தின் பொது வைத்தியசாலை மத்திய அரசின் சுகாதார அமைச்சின் கீழ் கைதவிர்ப்பு சபையொன்றின் ஊடாக | ஔடத தேவைப்பாட்டின் பிரகாரம் கட்டளையிடுவதற்கும் மிகை இருப்பு வேறு வைத்தியசாலை-களுக்கு பகிர்வளிவதற்கும் விரைவான வேலைத் திட்டமொன்று தயாரிக்கப்படல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| | கைதவிர்ப்புச் செய்து நிறைவு செய்யப்படுமெனவும் தெரிவிக்கின்றேன். | |
| (உ) மாகாண சுகாதார திணைக்களத்தினால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் திணைக்களங்களுக்கு இணைக்கப்பட்ட வாகனங்களுக்கு ஏற்பட்ட 65 விபத்துக்களுக்குரிய ரூபா 32,525,081 ஆன நட்ட சேதங்கள் தொடர்பாக, விபத்துக்கள் ஏற்பட்டு 01 ஆண்டும் 15 ஆண்டுகளுக்கும் இடைப்பட்ட காலம் கடந்திருப்பினும் அது தொடர்பாக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இந்த 65 வாகனங்கள் விபத்துக்களுக்குரியதாக நேர்ந்துள்ள விபத்துக்கள் தொடர்பாக தற்போது நாளதுவரையாக்கப்பட்ட தகவல்கள் பிரதேச அலுவலகங்களிலிருந்து விசாரிக்கப்பட்டுள்ளதுடன் அத் தகவல்கள் பெறப்பட்டவுடனே அலுவலகத்தின் தகவல்களுடன் ஒப்பிட்டு சமர்ப்க்கின்றேன். | விபத்துக்கள் தொடர்பாக விரைவாக நடவடிக்கை எடுக்கப்பட்டு நட்ட சேதங்கள் அறவிடப்படல் வேண்டும். |
| (ஊ) 2018 நவம்பர் 19 ஆந் திகதி விபத்துக்குள்ளாகிய தெல்தெனிய ஆதார வைத்தியசாலைக்கு இணைக்கப்பட்டிருந்த மருத்துவ ஊர்தி தொடர்பாக பொலிஸ் அறிக்கை மற்றும் மோட்டார் வாகன பரிட்சகரின் அறிக்கையின் பிரகாரம் ஊர்தியின் இயந்திர கோளாறு இன்றி ஓட்டுனரின் அதிக வேகத்தினால் ஊர்தியை கட்டுப்படுத்திக் கொள்வதற்கு முடியாமையினால் இந்த விபத்து ஏற்பட்டுள்ளதென குறிப்பிட்டிருந்த போதிலும் அவ் அறிக்கையை கருத்திற் கொள்ளப்படாது குறித்த விபத்தினால் இரசிற்கு ஏற்பட்ட நட்டம் ரூபா 7,409,132 ஆன தொகை நிதிப் பிரணமாம் 104(4) பரிசோதனை அறிக்கை ஊடாக புத்தகத்திலிருந்து பதிவழிப்பதற்கு அமைச்சின் செயலாளரினால் பரிந்துரை செய்யப்பட்டு பிரதான | தெல்தெனிய மாவட்ட ஆதார வைத்தியசாலைக்கு சொந்தமான WP LW – 1134 ஆம் இலக்க மருத்துவ ஊர்தி 2018 நவம்பர் 19 ஆந் திகதி விபத்துக்குள்ளாமைக்கு தொடர்புடையதாக ஏற்பட்ட ரூபா 5,727,869 ஆன நட்டம் இந்த மருத்துவ ஊர்தியை ஓட்டிய ஓட்டுனரின் தாமதக் குறைப்பாடு, கவனமின்மை மற்றும் கவனக் குறைப்பாட்டினால் ஏற்பட்ட விபத்து இன்மையினால் நட்ட சேதங்கள் பதிவேட்டிலிருந்து பதிவழித்து அகற்றுவதற்காக நி.பி 109 அறிக்கைகள் பரிந்துரை செய்து 2022 ஒக்தோபர் 20 ஆந் திகதிய கடிதத்தின் ஊடாக அங்கீகாரத்திற்காக மத்திய மாகாண சுகாதார | நி.பி புலனாய்விற்காக பொலிஸ் அறிக்கை மற்றும் மோட்டார் வாகன பரிசோதகரின் அறிக்கைகள் கருத்திற் கொள்ளப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | செயலாளருக்கு சமர்ப்பிக்கப்பட்ட பின்னர் 2020 ஆகஸ்ட் 13 ஆந் திகதி அங்கீகரிக்கப்பட்டு நட்டம் பதிவழிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. | செயலாளருக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | |
| (எ) | மாகாண சுகாதார திணைக்களத்தின் ஊடாக செயற்படுத்தப்பட்ட முதன்மை சுகாதார சேவைகள் முறைமையை வலுப்படுத்தும் செயற்திட்டத்தின் நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் பெறுகை நடவடிக்கைகள் தொடர்பான தெரிவு பரிசோதனையின் போது நோக்கத்திற்கு முரணாக 16 பணிகளுக்காக மொத்தம் ரூபா 21,060,274 மீளாய்வாண்டினுள் செலவிடப்பட்டிருந்தது. | மத்திய மாகாண சுகாதார திணைக்களத்தின் நிறுவனங்களுக்காக (திகன புனர்வாழ்வு வைத்தியசாலை) வீட்டு பொருட்கள் கொள்வனவு செய்தல் மற்றும் திகன வைத்தியசாலைக்கு சாப்பாடு மேசையொன்று மற்றும் 06 கதிரைகள் கொள்வனவு செய்தல், கடுகன்னாவ பிரதேச சுகாதார பயிற்சி மத்திய நிலையத்தின் பழுதுபார்த்தல் நடவடிக்கைகள் மற்றும் உபகரணங்கள் கொள்வனவு செய்தல், நுவரஎலிய பிரதேச சுகாதார சேவைகள் அலுவலகத்தின் கேட்போர் கூடம் பழுதுபார்த்தல், மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்தினை பழுதுபார்த்தல் மற்றும் உபகரணங்கள் கொள்வனவு செய்தல், கண்டி பிரதேச சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்தினை பழுதுபார்த்தல், ரிகில்லகஸ்கட ஆதார வைத்தியசாலையின் வைத்திய நிபுணரின் உத்தியோகப்பூர்வ இல்லங்கள் பழுதுபார்த்தல், பிரதேச சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகங்களில் | முதன்மை சுகாதார சேவைகள் முறைமையை வலுப்படுத்தும் செயற்திட்டத்தின் நோக்கங்கள் நிறைவேற்றும் வகையில் நிதியேற்பாட்டினை பயன்படுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| | பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் 2021 எசல பெரஹெர தன்னார்வளர் அனுமதிப்பத்திரம்/புத்தக அட்டை அச்சிடல் போன்ற விடயங்களுக்காக செலவினம் ஏற்கப்பட்டுள்ளது. இந்த செலவினம் பொது மக்களுக்கு அத்தியாவசிய, முதன்மை சுகாதாரத்திற்கு தொடர்புடைய முதலுதவி மற்றும் வைத்தியசாலை கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் பேணிச் செல்வதற்கு தேவைப்படுகின்ற வசதிகள் வழங்குவதற்காக என்பதனால் இது நோக்கத்திற்கு முரணான பணியல்ல என தெரிவித்துக் கொள்கின்றேன். | |
| (ஏ) 2020 ஆகஸ்ட் 20 ஆம் திகதி வெலிசரவில் அமைந்துள்ள தேசிய காசநோய் புலனாய்வு ஆய்வுக்கூடத்திலிருந்து (NTRL) பெறப்பட்டிருந்த இரத்த மாதிரிகள் மற்றும் உபகரணங்கள் பரிசோதனையின் பின்னர் உயிர் ஆதரவு மேற்கொண்டு வெளிச் சூழலுக்கு விடுவிக்கப்படுகின்றதுடன் அதற்காக ரூபா 1,800,000 தொகையொன்று செலவிடப்பட்டு Auto clave (50ml) இயந்திரம் கொள்வனவு செய்யப்பட்டிருந்த போதிலும், அதை செயல்படுத்துவதற்காக அறிவின்மையினால் பயன்பாட்டிற்கு எடுக்கப்படாது அதிக காலம் மார்பு வைத்தியசாலையில் விளைவற்று | கடந்த ஆண்டுகளில் நிலவிய கொவிட் 19 தொற்று நிலையினால் இநந்த இயந்திரத்தின் மென்பொருள் தொடர்பாக ஆய்வுக்கூட பதவியணிக்கான விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டம் நடத்துவதற்கு NTRL நிறுவனத்திற்கு முடியாது போனது. எனினும் இந்த Auto Clave இயந்திரம் NTRL நிறுவனத்தின் ஊடாக அதற்குரிய ஆலோசனை பெற்றுக் கொள்ளப்பட்டு சேவைக்காக நிறுவனத்தில் தாபிக்கப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் இந்த இயந்திரம் தொடர்பாக NTRL | இயந்திரம் செயல்பாட்டுடன் பயன்படுத்துவதனை உறுதி செய்யப்படல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| காணப்பட்டது. | நிறுவனத்தின் உத்தியோகத்தரொருவரினால் உபகரணம் செயல்படுத்தர் தொடர்பாக மற்றும் அதன் செயல்பாடு தொடர்பாக தத்துவார்த்தமான விடயங்கள் மற்றும் பிரயோகமாக உபகரணம் செயல்படுத்துவதற்கு குறித்த ஆலோசனைகளும் பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளது. எனவே அந்த உபகரணம் தற்போது சேவை நடவடிக்கைகளுக்காக பயன்படுத்தப்படுகின்றமை நிறுவனத்திற்கு பொறுப்பான வைத்தியர்களின் (கையொப்பம் இன்றிய) பிண்ணினைக்கப்பட்டுள்ள கடிதத்தில் காண்பிக்கப்பட்டுள்ளது. | |
| (ஐ) மாகாண சுகாதார சேவைகள் திணைக்களத்திற்கு சொந்தமான இயக்கும் நிலையில் இல்லாத 03 வாகனங்கள் நீண்ட காலமாக தரித்து வைக்கப்பட்டிருந்த போதிலும், அவ் வாகனங்களை பழுதுபாரத்து பயன்பாட்டிற்கு எடுப்பதற்கு அல்லது கைதவிர்ப்பு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | PB-7423 ஆம் இலக்க வாகனம் பழுதுபார்க்கப்பட்டு இயக்கும் நிலைக்கு கொண்டு வரப்பட்டுள்ளதுடன், ஏனைய வாகனங்கள்ஏலத்திற்காக பிரதான செயலாளர் அலுவலகத்திற்கு குறித்த தகவல்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | வாகனங்களை விரைவாக பழுதுபாரத்து பயன்பாட்டிற்கு எடுப்பதற்கு அல்லது ஏலமிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ஒ) 2019 மே 9 ஆந் திகதி மத்திய மாகாண பிரதான செயலாளரினால் குறித்த பொறுப்பு கூற வேண்டிய 14 உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்படுவதற்கு பரிந்தரை செய்யப்பட்டிருந்த, கண்டி மாவட்ட | இது தொடர்பாக இரு உத்தியோகத்தர்களிடமிருந்து பணம் அறவிடப்பட்டுள்ளதுடன் இன்றைய தினம் இது வரையில் மிகை கட்டணம் ரூபா 289,008 ஆவதுடன் | பிரதான செயலாளரின் பரிந்துரையின் பிரகாரம் அறவிடப்படவுள்ள அனைத்து பணமும் |

| | | |
|---|---|---|
| சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்தின் ஊடாக சுகாதார உபகரணங்களில் நிறப்பூச்சு பூசுதல் என பொய்யாக செலுத்தப்பட்டிருந்த ரூபா 3,114,905 ஆன தொகையில் 2022 நவம்பர் 02 ஆந் திகதியாகையில் 12 உத்தியோகத்தர்களிடமிருந்து ரூபா 2,825,897 ஆன தொகை அறவிடப்பட்டிருக்கவில்லை. | இன்னுமாக மிகை கட்டணமாக்கவுள்ள தொகை ரூபா 2,825,897 ஆகும். | விரைவாக அறவிடப்படல் வேண்டும். |

## 1.5.14 தலைப்பு 563 – மத்திய மாகாய சமூக நலன்புரி நன்னடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்பு சேவை திணைக்களம்

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) விசேட தேவையுடைய நபர்கள் இனங்காணப்பட்டு அவர்களுக்கு தேவைப்படுமென தீர்மாணிக்கப்பட்ட உபகரணங்கள் கொள்வனவு செய்வதற்கு மற்றும் அவற்றை அப் பயனாளிகளுக்கு விரைவாக பெற்று கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு மேற்கொள்ளாது கொள்வனவு செய்யப்பட்டிருந்த ரூபா 14,607,150 ஆன உபகரணங்கள், 2022 மார்ச் 04 கணக்காய்வு திகதியாகையில் 63 நாட்கள் தொடக்கம் 4 ஆண்டுகளுக்கு மெற்பட்ட காலம் மத்திய மாகாண சமூக நலன்புரி நன்னடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்பு சேவை திணைக்களத்தின் களஞ்சியத்தில் வைக்கப்பட்டிருந்தன. | கணிக்கப்பட்ட அளவுகளில் பெறப்பட் போதிலும், கடந்த ஆண்டுகளில் நாட்டினுள் மற்றும் முழு உலகத்திலும் நடந்த விசேட நெருக்கடிகளின் (கொவிட் போன்ற) காரணத்தினால் வழங்கப்பட்ட அளவுகள் வேறுப்பட்டன. எவ்வாறெனினும் தேவை ஏற்பட்டவுடனே தேவையான உபகரணங்கள் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமென தெரிவிக்கின்றேன். எவரேனும் நபரொருவருக்கு ஊனமாகியவுடனே ஊனமுற்றோர் உபகரணங்கள் பெற்றுக் கொடுக்கும் தேவைப்பாட்டினால் இவ்வாறான இருப்பு களஞ்சியத்தில் வைக்கப்படுவதற்கு | உபகரங்கள் பயனுள்ள வகையில் பயன்படுத்தப்படல் வேண்டும். |

நேர்கின்றது.

| | | |
|---|---|---|
| (ஆ) மத்திய மாகாண நலன்புரி நன்னடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்பு சேவைகள் திணைக்களத்தின் கீழ் நிறுவகிக்கப்படும் வேரலவத்த ஆண்பிள்ளைகள் சிறுவர் இல்லம், பெண்கள் இல்லத்தின் மற்றும் டிகிரி செவன சிறுவர் இல்லத்தின் மீளாய்வாண்டு 31 ஆந் திகதிக்கு அங்கீகரிப்பட்ட பதவியணிக்கு சொந்தமான 08 பதவிகளில் 23 வெற்றிடங்கள் காணப்பட்டன. | வேரலவத்த பெண்கள் மற்றும் ஆண்கள் சிறுவர் இல்லம் மற்றும் டிகிரி செவன மாகாண சிறுவர் அபிவிருத்தி மத்திய நிலையத்தின் பதவிகளுக்காக ஆட்சேர்ப்பு செய்வதற்கு அமைச்சின் செயலாளருக்கு 2020 யூலை 03/ 2020 யூலை 22/ 2020 ஆகஸ்ட் 26 திகதிய கடிதங்கள் ஊடாக விண்ணப்பிக்கப்பட்டன. முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கை இல 01/2020 ஊடாக அனைத்து நிறுவனங்களினதும் முதன்மை சேவை பிரிவில் (PL-1, PL-2 மற்றும் PL-3) தற்போது நிலவுகின்ற வெற்றிடங்களுக்காக ஆட்சேர்ப்புக்கள் மீள் அறிவிக்கும் வரையில் இடை நிறுத்தப்பட்டுள்ளமையினால் பிரதான செயலாளரின் 2020 செப்தெம்பர் 22 திகதிய கடிதத்தின் ஊடாக பொது திறைச்சேரியின் முகாமைத்துவ சேவைகள் திணைக்கள பணிப்பாளர் நாயகத்தின் விசேட அங்கீகாரமும் கோரப்பட்டுள்ளது. | வெற்றிடங்கள் நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

### 1.5.15 தலைப்பு 570 – மத்திய மாகாண வீதி அபிவிருத்தி அமைச்சு

### 1.5.15.1 மத்திய மாகாண பயணிகள் போக்குவரத்து சேவைகள் அதிகார சபை

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) மகாகண திறைச்சேரியினால் கடந்த மற்றும் மீளாய்வாண்டுகளுக்குரிய மீண்டெழும் செலவினம் ஏற்பதற்காக பயணிகள் போக்குவரத்து சேவைகள் அதிகார சபைக்கு பெற்றுக் கொடுக்கப்பட்டிருந்த ரூபா 124,000,000 ஆன முற்பணம் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் தீர்க்கப்பட்டிருக்கவில்லை. | அந்த முற்பணம் தீர்ப்பதற்கு தாமதித்திருந்த போதிலும் மொத்த முற்பணத்தில் ரூபா 05 மில்லியன் தொகை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | முற்பணம் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ஆ) பயணிகள் போக்குவரத்து அதிகார சபையின் மீளுாய்வாண்டு இறுதியில் அங்கீகரிக்கப்பட்ட ஊழியர் எண்ணிக்கையில் 19 பதவிகளுக்குரிய 91 வெற்றிடங்கள் காணப்பட்டன. அதில் பிரதி பொது முகாமையாளர் (அபிவிருத்தி மற்றும் பயிற்சி) பிரதி பொது முகாமையாளர் (போக்குவரத்து மற்றும் செயற்பாட்டு) மற்றும் பிரதி பொது முகாமையாளர் (நிதி மற்றும் நிர்வாகம்) ஆகிய சிரேஷ்ட மட்டத்தின் பதவிகளும் வெற்றிடங்களாக காணப்பட்டது. | புதிய ஆட்சேர்ப்பிற்காக நிதியேற்பாடு ஒதுக்கப்படுவதற்கு போதுமான அளவில் நிறுவனத்தில் நிதி இல்லாமை தற்போதும் குறித்த வெற்றிடங்கள் நிலவுவதற்கு காரமணாகியது. | வெற்றிடங்கள் நிரப்பப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

(இ) பயணிகள் போக்குவரத்து சேவைகள் அதிகார சபைக்குரிய கணக்காய்வாளர் தலைமை அதிபதி அறிக்கைகளில் உள்ளடக்கப்பட்டிருந்த மத்திய மாகாண அரசாங்க கணக்குகள் குழுவினால் பரிசோதிக்கப்பட்ட பின்னர் பின்னூட்டல் செய்பாடு மேற்கொள்ளாத கணக்காய்வு பந்திகள் தொடர்பான விபரங்கள் பின்வருமாறு.

| | | | |
|---|---|---|---|
| i. | 2008 ஆகஸ்ட் 01 திகதிய 50 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை ஏற்பாடுகளிற்கு அமைவின்றி உரிய எல்லையை மிகைத்து தலைவருக்கு ரூபா 406,955 ஆன எரிபொருள் கொடுப்பனவு மேலதிகமாக கொடுப்பனவு செய்யப்பட்டிருந்த போதிலும் அத் தொகையை அறவிடப்படுவதற்காக தொடர்புடைய தரப்பினருக்கு அறிக்கப்படுவதற்கு மட்டும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. | மேலதிகமாக கொடுப்பனவு செய்யப்பட்டுள்ள எரிபொருள் கொடுப்பனவு அறவிடப்படுவதற்கு தொடர்புடைய தரப்பினருக்கு கடிதத்தின் ஊடாக தெரிவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இது வரையில் கொடுப்பனவு செய்யப்பட்டிராமையினால் சட்டரீதியான நடவடிக்கைகள் எடுப்பதற்காக சட்ட ஆலோசனைகள் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமென தெரிவிக்கின்றேன். | மாகாண கணக்குகள் செயற்குழுவிக் ஆலோசனைகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| ii. | சீபீ-கேபீ-7924 ஆம் இலக்க ஜீப் வாகனத்திற்கு ஏற்பட்ட விபத்து காரணமாக பழுதுபார்ப்பதற்காக ரூபா 716,753 தொகையொன்று செலவிடப்பட்டிருந்த போதிலும் காப்புறுதி உரித்தில் மேவுகை செய்யப்பட்டிருந்தது ரூபா 547,446 ஆன தொகை மட்டுமாகும். காப்புறுதியில் மேவுகை | அக் காலப்பகுதியினுள் நி.பி 104 பிரகாரம் பரிசோதனை நடத்தப்பட்டு அதற்கு தொடர்புடைய நட்டம் மற்றும் பொறுப்பு கூற வேண்டியவர்கள் உறுதி செய்யப்பட்டிராததுடன் இந்த விபத்து தொடர்பில் நி.பி 104 பிரகாரம் பரிசோதனை | மாகாண நிதி விதி 54 பிரகாரம் பரிசோதனை விரைவில் நடத்தப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | செய்யப்பட்டிராத ரூபா 169,307 ஆன நட்டத்திற்கு பொறுப்பு கூற வேண்டிய நபர்கள் உறுதி செய்யப்பட்டு அவர்களுக்கு பெறுப்பு பணிக்கப்பட்டு அறவிடப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிராததுடன் நி.வி 54 பிரகாரம் பரிசோதனையும் இதுவரையில் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | நடத்தப்பட்டு கணக்காய்விற்கு அறிக்கை சமர்ப்பிக்கின்றேன். | |
| iii. | இலஞ்சம் பெற்றதாக குற்றம் சாட்டப்பட்ட தலைவர் கட்டாய விடுமுறையில் அனுப்பப்பட்டிருந்ததுடன், முறையாக மீண்டும் கடமையில் மீள் அமர்த்தப்படாது 2012 ஒக்தோபர் தொடக்கம் திசெம்பர் வரையான காலப்பகுதியில் ரூபா 419,250 ஆன தொகை தலைவர் கொடுப்பனவாக செலுத்தப்பட்டிருந்தது. | 2000 இன் 01 ஆம் இலக்க மத்திய மாகாண போக்குவரத்து சேவைகள் அதிகார சபையின் நியதிச் சட்டத்தின் பிரகாரம் தலைவர் நியமிக்கப்படல் மற்றும் அகற்றப்படல் போன்ற அனைத்து அதிகாரங்களும் விடயத்திற்கு பொறுப்பான அமைச்சருக்கு காணப்படுகின்றது. இந்த தலைவர் அகற்றப்படுவதற்கு தொடர்புடையதாக அப்போதிருந்த விடயத்திற்கு பொறுப்பான அமைச்சர் வர்த்தமானி பத்தரிக்கை பிரசுரிக்கப்பட்டிராததுடன் தலைவருக்கு தொடர்புடைய கோவைகளும் பராமரிக்கப்பட்டது அப்போதிருந்த பிரதான மற்றும் போக்குவரத்து அமைச்சில் என தெரிவிக்கின்றேன். | கணக்குகள் செயற்குழு தீர்மானத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| (ஈ) மத்திய மாகாண வீதி அபிவிருத்தி, போக்குவரத்து, மின்சாரம் மற்றும் வலுசக்கி மற்றும் வீடமைப்பு மற்றும் கட்டுதான அமைச்சு மற்றும் பிரதேச அபிவிருத்தி வங்கியுடன் ஒருங்கிணைந்து செயல்படுத்தப்படும் ‘‘சஹன் பியச’’ வீடமைப்பு கடன் திட்டம் தொடர்பான புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் 4 ஆம் பந்தியின் பிரகாரம் இந்த நிகழ்ச்சித் திட்டத்திலிருந்து அறவிடப்படுகின்ற 8 சதவீத வட்டி தொகையில் முறையே 75 சதவீம் பிரதேச அபிவிருத்தி வங்கிக்கும், 25 சதவீதும் வீடமைப்பு அபிவிருத்தி திணைக்களத்தின் நடைமுறைக் கணக்கில் செலவு வைக்கப்பட வேண்டிய போதிலும் அவ் ஏற்பாடுகளுக்கு முரணாக 2015 திசெம்பர் மாதம் வீடமைப்பு ஆனையாளர் பெயரில் திறக்கப்பட்டிருந்த சேமிப்பு கணக்கிற்கு ரூபா 1,074,687 ஆன மொத்த வட்டியும் செலவு வைக்கப்பட்டிருந்தது. | மாகாண வீடமைப்பு திணைகக்ளம் மற்றும் பிரதேச அபிவிருத்தி வங்கி ஒருங்கிணைந்து மேற்கொள்ளும் சஹன் பியச வீடமைப்பு கடன் நிகழ்ச்சித் திட்டம் தொடர்பாக 2017 திசெம்பர் 12 திகதிய ஒப்பந்தத்திற்கு அமைவாக பிரதேச அபிவிருத்தி வங்கிக்கு மற்றும் மாகாண வீடமைப்பு ஆனையாளரின் நடைமுறை கணக்கிற்கு வட்டியில் 75 சதவீதம் பிரதேச அபிவிருத்தி வங்கிக்கும் 25 சதவீதம் வீடமைப்பு திணைக்களத்தின் நடைமுறை கணக்கிற்கும் செலவு வைக்கப்பட வேண்டுமென குறிப்பிடப்படுகின்றது. ஒப்பந்தத்தின் சில விடயங்கள் காலத்திற்கேற்ப மாற்றப்பட வேண்டியமையினால் புதிய உப்பந்தமொன்றிற்கு உடன்படுவதற்கு வரைவு செய்யப்பட்ட புதிய ஒப்பந்தம் 2021 ஒக்தோபர் 14 ஆந் திகதி மத்திய மாகாண பிரதான செயலாளரின் அங்கீகாரத்திற்கு முன்வைக்கப்பட்டுள்ளதுடன் தற்போது அவ் ஒப்பந்தத்தின் மேல் நடவடிக்கைகளுக்காக சட்ட உத்தியோகத்தருக்கு முன்வைக்கப்பட்டுள்ளதென தெரிவிக்கின்றேன். | புதிய ஒப்பந்தம் அங்கீகரிக்கப்படும் வரையில் தற்போதுள்ள் ஒப்பந்தம் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

## 1.5.15.2 மத்திய மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபை

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) அதிகார சபையினால் பயன்படுத்தப்படுகின்ற 41 வாகனங்களில் 35 வாகனங்களின் உரித்து அதிகார சபைக்கு கையகப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபையினால் தற்போது பயன்படுத்தப்பட்டு வருகின்ற வாகனங்கள்/இயந்திரங்களின் உரித்து அதிகார சபைக்கு கையளிக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுத்து தருமாறு 2021 ஏப்ரல் 02 திகதிய அமைச்சின் செயலாளரின் ஊடாக பிரதான செயலாளருக்கு கடிதமொன்று முன்வைக்கப்பட்டுள்ளது.<br>2021 ஒக்தோபர் 06 திகதி செயலாளர் வீதி அமைச்சிற்கு மீண்டும் விண்ணப்பக் கடிதமும் முன்வைக்கப்பட்டுள்ளது. | வாகனங்களின் உரித்து கையகப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ஆ) அதிகார சபைக்குரிய கணக்காய்வாளர் தலைமை அதிபதி அறிக்கைகளில் உள்ளடக்கப்பட்டிருந்த மத்திய மாகாண அரசாங்க கணக்குகள் செயற்குழுவினால் பரீட்சிக்கப்பட்ட பின்னர் பின்னூட்டல் நடவடிக்கை நிறைவு செய்யப்படாத கணக்காய்வு பந்தி தொடர்பாக விபரம் பின்வருமாறு. | | |

| | | | |
|---|---|---|---|
| (i) | இயந்திர பொறியியல் பிரிவிற்கு இணைக்கப்பட்டுள்ள 04 லொறிகளின் ஓட்டக் குறிப்புக்களில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் பிரகாரம் முதலாவது குறிப்பிடப்பட்டுள்ள 03 லொறிகளின் எரிபொருள் லீட்டரொன்றில் 4 கி.மீ உம் மற்றைய லொறி எரிபொருள் லீட்டருக்கு 03 கீ.மீ ஆகிலும் குறைந்த பட்சம் இயக்கப்பட வேண்டிய போதிலும், அவ் வாகனங்களில் எரிபொருள் லீட்டருக்கு இயக்கப்படுகின்ற தூரம் முறையே 03 மற்றும் 02 கி.மீ என கருதப்பட்டு எரிப்பொருள் சீராக்கப்படுவதற்கு வசதியளிக்கப்பட்டிருந்தது. இந்த நிலையினுள் ஆரம்பத்திலிருந்து அவ் வாகனத்திற்காக மேலதிகமாக எரிபொருள் அளவு 169,229 லீட்டராவதுடன் அதன் பெறுகைகள் பெறுமதி ரூபா 13,572,166 ஆகும். மேலதிகமாக பெற்றுக் கொள்ளப்பட்ட எரிபொருளுக்காக அறவிடப்படுவதற்கு கணக்குகள் செயற்குழு கட்டளை பெற்றுக் கொள்ளப்பட்டிருந்த போதிலும் இது வரையில் அறவிடப்பட்டிருக்கவில்லை. | இது தொடர்பாக குழுவொன்று நியமிக்கப்பட்டதுடன் அதன் பரிசோதனை நடவடிக்கைகள் நிறைவு செய்யப்பட்டுள்ளது. குழுவினால் பெற்றுக் கொடுக்கப்பட்ட அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள பிரகாரம் நட்டமொன்று ஏற்பட்டிருக்கவில்லை. அதன் பிரகாரம் அவ் அறிக்கை நி.பி 104(4) இன் கீழ் நட்டங்கள் தொடர்பான இறுதி அறிக்கை ஊடாக கணக்காய்விற்கு முன்வைக்கப்பட்டுள்ளது. | கணக்குகள் செயற்குழுவின் தீர்மானம் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ii) | ரூபா 15,284,898 செலவு செய்து புவெக்பிடிய வெலமிடியாவ வீதி மேம்படுத்தும் பணி உள்ளடங்கலாக வீதி மேம்படுத்தும் 10 பணிகளுக்கு தொடர்புடையதாக 2017 யூலை 31 திகதிய மத்திய மாகாண கணக்குகள் செயற்குழுவினால் பெற்றுக்கொடுக்கப்பட்ட கட்டளை | இந்த வீதி மேம்படுத்தும் பந்திக்காகவே 2018 யூலை 20 மத்திய மாகாண அரசாங்க கணக்குகள் செயற்குழு ஒரு கட்டளையொன்று பெற்றுக் கொடுத்திருந்தது. பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள 10 வீதிகளுக்காக நி.பி 104 பரிசோதனை குழுவொன்று | நி.பி 104 பரிசோதனை விரைவில் நிறைவு செய்யப்பட்டு மாகாண கணக்குகள் செய்றகுழு பரிந்துரையை செயற்படுத்தப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை. | நியமிக்கப்பட்டுள்ளது. அதன் பரிசோதனை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றதுடன் தற்போது அப் பரிசோதனை நடவடிக்கைகள் இறுதிக் கட்டத்திலுள்ளது. | |
| (iii) | இயந்திர பொறியியல் பிரிவின் 03 லொறிகளுக்கு தொடர்புடையதாக 301 சந்தர்ப்பங்களின் போது எரிபொருள் தொட்டியின் கொள்ளளவினை மிகைக்கும் வண்ணம் எரிபொருள் பெற்றுக்கொள்ளப்பட்டதென நாளாந்த ஓட்டக் குறிப்புக்கள் எழுதப்பட்டு ரூபா 96,549 பெறுமதியான 3771 லீட்டர் எரிபொருள் தவறாக பெற்றுக் கொள்ளப்பட்டிருந்தது. | இதற்காக குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் 104 பரிசோதனை நடவடிக்கைகள் நிறைவு செய்து அறிக்கை பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக வரும் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுவின் போது கலந்துரையாடுவதற்கு எதிர்பார்க்கப்படுவதுடன் அதன் பிரகாரம் குறித்த அறவிடல்கள் மேற்கொள்ளப்படுமென தெரிவித்துக் கொள்கின்றேன். | மாகாண கணக்குகள் செயற்குழுவின் கட்டளை பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (iv) | விலைகள் உயர்விற்கு ஒப்பந்தக்காரருக்கு கொடுப்பனவு செய்ய முடிவது விலை சரீராக்கல் சூத்திரம் ஒப்பந்த உடன்படிக்கையில் உள்ளடக்கப்பட்டிருந்தால் மட்டும் என்றாலும், அவ் ஒழுங்குகளுக்கு முரணாக 53 ஒப்பந்தங்களுக்காக ரூபா 15,096,045 ஆன விலை உயர்வுகள் செலுத்தப்பட்டிருந்தது. | இந்த அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் வரும் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு கூட்டத்தின் போது கலந்துரையாடுவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. | கணக்குகள் செயற்குழுவின் கட்டளைகள் செயற்படுத்தப்படல் வேண்டும். |

### 1.5.15.3 மத்திய மாகாண புடவைக் கைத்தொழில் திணைக்களத்தின் புடவைக் கைத்தொழில் வேளைத்தலங்கள் தாபித்தல் மற்றும் நிர்வாகம் தொடர்பாக வணிக முற்பண கணக்கு

---

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) மாகாண நிதி விதி 378.2 பிரகாரம் முற்பண கணக்கு நடவடிக்கைக்கு தொடர்புடைய தேறிய இலாபம் வருடாந்த வருமான மதிப்பீடுகளில் குறிப்பிட்ட வருமான விடயமொன்று காணப்படுமெனில் அவ் விடயத்திற்கும், மற்றைய அனைத்து சந்தர்ப்பங்களின் போதும் மாகாண சபையின் நானாவித வருமான விடயத்திற்கும் செலவு வைக்கப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்படாது மீளாய்வாண்டு இறுதி திகதியில் மிகை மற்றும் பற்றாக்குறை கணக்கில் ரூபா 90,656,903 ஆன செலவு மீதியொன்று நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. | வணிக முற்பணக் கணக்கின் வருட இறுதி திகதியில் மிகை கணக்கில் ரூபா 90,656,903 ஆன செலவு மீதியொன்று காணப்படினும் காசு புத்தகத்தின் பிரகாரம் மீதி ரூபா 23,224,934 ஆகும். இந்த தொகை மெக்காகின் சம்பளம் செலுத்துவதற்காக மாதாந்தம் ரூபா 3 மில்லியனிற்கு கிட்டடிய தொகையொன்று மற்றும் உற்பத்தி நடவடிக்கைகள் தொடர்ச்சியாக பேணிச் செல்வதற்காக தேவையான மூலப்பொருட்கள், நூல், டய் மற்றும் இரசாயன பொருட்கள் உட்பட ஏனைய உற்பத்தி செலவினத்தினை ஏற்பதற்காக வருடாந்தம் ரூபா 80 மில்லியனிற்கு கிட்ட செலவினமொன்று ஏற்பதற்கு நேர்கின்றதுடன், மத்திய மாகாண சபையிலிருந்து எந்தவொரு நிதி அல்லது நிதியேற்பாடும் பெற்றுக்கொள்ளப்படாமை-யினாலும் திணைக்களத்தின் செய்றபாடுகள் தொடர்ச்சியாக பேணிச் செல்லும் தேவையின் காரணத்தினாலும் இந்த தொகை கணக்கில் நிறுத்தி வைத்துக் கொள்ளப்பட்டதென தெரிவிக்கின்றேன். | நிதி விதி பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| (ஆ) சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்கள் பிரகாரம் 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக விணிக முற்பண கணக்கு நடவடிக்கையின் செயற்பாட்டு நடவடிக்கைகளில் ரூபா 4,999,515 ஆன மிகை காணப்பட்டதுடன அதற்கு ஆண்டின் போலியான கட்டணங்கள் சீராக்கப்பட்டதன் பின்னர் மிகை ரூபா 3,799,515 ஆகும். இந்த வணிக முற்பண கணக்கு நடவடிக்கைகளுக்கு நேரடியாக பங்களிப்புச் செய்யும் புடவைக் கைத்தொழில் மத்திய நிலையங்களில் புடவைக் கைத்தொழில் ஆலோசகர், காப்பாளர் மற்றும் தொழிலாளர் சம்பளம் ரூபா 94,338,950 சீராக்கப்பட்ட பின்னர் செயற்பாட்டு விளைவு ரூபா 89,339,435 ஆன பற்றாக்குறையாகக் காணப்பட்டது. | புடவைக் கைத்தொழில் ஆலோசகர், காப்பாளர் மற்றம் தொழிலாளர் பதவிகள் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியின் பதவிகளென்பதனால் அவர்களின் சம்பளம் வருடாந்த பாதீட்டினுள் உள்ளடக்கப்பட்டு வருடாந்தம் நிதியேற்பாடு ஒதுக்கப்பட்டுள்ளது. எனவே அச் சம்பள செலவினமும் மாகாண சபை செலவின கணக்கில் ஏற்கப்படுகின்றமையினால் முற்பண கணக்கிற்கு செலவின சுமையாக உள்ளடக்கப்பட மாட்டாது. இந்த பணிக்காக நேரடியாக பங்களிப்புச் செய்யும் தொழிலாளிகளுக்காக மேற்கொள்ளப்படுகின்ற கொடுப்பனவு வணி முற்பண கணக்கிற்கு சீராக்கம் செய்யப்பட்டுள்ளது. இந்த திணைக்களம் தாபித்தமைக்கான ஒரு காரணம் கிராம மக்களின் வாழ்க்கை தரத்தினை மேம்படுத்தல் மற்றும் தொழில் பாதுகாப்பு என்பதனால் இலாபம் ஈட்டல் பிரதான நோக்கமில்லை. எனினும் உற்பத்தி பணிகளுக்கு நேரடியாக ஏற்கப்படுகின்ற அனைத்து செலவினங்களும் சீராக்கப்பட்ட பின்னரும் ரூபா 4,999,515 ஆன மிகையொன்று காண்பிக்கின்றது. | வணிக முற்பணக் கணக்கு நடவடிக்கைக்குரிய அனைத்து செலவினங்களும் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| (இ) மீளாய்வாண்டு இறுதி திகதிக்கு கடன் பட்டோர் மீதி ரூபா 27,275,622 ஆக காணப்பட்டதுடன் அதில் 5 ஆண்டுகளுக்கு மேற்பட்ட கடன் மீதி 42.8 சதவீதம் அதாவது ரூபா 11,684,462 ஆக காணப்பட்டது. | கடன் அறவிடலானது தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றதுடன் மீளாய்வாண்டின், அதாவது 2021 திசெம்பர் 31 இல் காணப்பட்ட கடன்பட்டோர் மீதியில் 2022 ஆகஸ்ட் 31 ஆந் திகதியாகையில் 46 சதவீதத்திற்கு கிட்டிய தொகை, அதாவது ரூபா 12,020,895 அறவிடப்பட்டுள்ளதுடன் இன்னுமாக நிலுவையாகவுள்ள கடன்பட்டோர் மீதி ரூபா 14,070,797 ஆகும். அதில் 5 ஆண்டுகளுக்கு மேற்பட்ட ரூபா 11,684,462 ஆன நிலுவைக் கடன் மீதியில் 2007 மற்றும் 2008 ஆம் அண்டுகளுக்குரியதாக நி.பி 104 பரிசோதனை மேற்கொண்டு குழு பரிந்துரை பிரகாரம் அறவிடப்படுவதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றதென தெரிவிக்கின்றேன். | கடன் மீதி விரைவாக அறவிடப்படல் வேண்டும். |

### 1.5.16 தலைப்பு 582 – மத்திய மாகாண கைத்தொழில் அபிவிருத்தி மற்றும் வர்த்தக மேம்பாட்டு திணைக்களம்

---

மத்திய மாகாண கைத்தொழில் அபிவிருத்தி மற்றும் வர்த்தக மேம்பாட்டு திணைக்களத்தின் உற்பத்தி மற்றும் விற்பனை தொடர்பான வணிக முற்பணக் கணக்கு

---

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்படுகின்ற ரூபா 414,744,164 ஆன சொத்துக்கள் மீதிகள் 05 மற்றும் ரூபா 293,350,026 ஆன பொறுப்புக்கள் மீதிகள் 02 உறுதி செய்வதற்காக உரித்து ஒப்பாவணம், நிலையான சொத்துக்கள் அட்டவணை மற்றும் மீதி உறுதிப்படுத்தல்கள் சமர்ப்பிக்கப்படாமையினால் கணக்காய்வின் போது அம் மீதிகள் திருப்திகரமாக அங்கீகரிக்க முடியவில்லை. | சொத்துக்கள் பதிவு செய்யப்பட்டு பேணிச் செல்லும் தேவைப்பாடு 2017 ஆகஸ்ட் 28 திகதிய 01/2017 ஆம் இலக்க சொத்துக்கள் முகாமைத்துவம் சுற்றறிக்கை ஊடாக காண்பிக்கப்பட்டிருந்த போதிலும் 2006 சனவரி 01 ஆந் திகதி தாபிக்கப்பட்டிருந்த கைத்தொழில் அபிவிருத்தி மற்றும் வர்த்தக மேம்பாட்டு திணைக்களத்திற்கு சொந்தமான சொத்துக்கள் 2021 ஆண்டு வரையிலும் மதிப்பிடப்பட்டு கணக்கிடப்பட்டிருக்கவில்லை. 2022 ஆம் ஆண்டில் அனைத்து நிலையான சொத்துக்களும் பதிவு செய்யப்பட்டு சமர்ப்பிக்கின்றேன். | சொத்துக்கள் மற்றும் பொறுப்பு மீதி உறுதிப்படுத்தல்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். |
| (ஆ) உற்பத்தி மற்றும் விற்பனை முற்பணக் கணக்கிற்கு தொடர்படையதாக வருடாந்த ஒதுக்கீட்டுச் சட்டத்தின் ஊடாக அதிகாரமளிக்கப்பட்ட பெறுவனவுகளின் குறைந்தபட்ட | 2021 ஆம் ஆண்டிற்காக பெறப்பட்ட உற்பத்தி மற்றும் விற்பனை முற்பண கணக்கின் உள்ளவாரான வருமானம் ரூபா 6,905,744 ஆகும். திணைக்களத்திற்கு பெறப்பட்ட | ஆண்டிற்காக அங்கீகரிக்ப்பட்ட திருத்தப்பட்ட குறைந்தபட்ச பெறுவனவு எல்லையினுள் |

| | | |
|---|---|---|
| எல்லை ரூபா 5,000,000 ஆக காணப்பட்ட போதிலும், அவ் எல்லை ரூபா 9,500,000 என திருத்தப்பட்டிருந்தது. எனினும் மீளாய்வாண்டு இறுதி திகதியில் ஆண்டின் பெறுவனவுகளின் உள்ளவாரான எல்லை ரூபா 6,905,744 ஆகியமையினால் ரூபா 2,594,256 இனால் பெறுவனவு எல்லையினை அடைய முடியாதிருந்தது. | அரசாங்க கட்டளைகளின் வருமானம் மற்றும் 2004 – 2021 வரை அறவிடப்படாதிருந்த கடன்பட்டோர் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 8,367,606 ஆன பெறுமானமும் கருத்திற் கொள்ளப்பட்டு பெறுவனவுகளின் குறைந்தபட்ட எல்லை ரூபா 9,500,00 என திருத்தப்பட்டது. எவ்வாறெனினும் 2004 – 2021 வரை அறவிடப்படாதிருந்த கடன்பட்டோர் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 318,066 மற்றும் 2021 ஆம் ஆண்டினுள் நிறைவேற்றப்பட்ட அரசாங்க கட்டளைகளுக்காக அறவிடப்பட வேண்டிய ரூபா 8,049,540 ஆன தொகை 2021 திசெம்பர் 31 வரையிலும் அறவிடப்படாதிருந்தது. பெறுவனவு குறைந்தபட்டச எல்லையினை அடைவதற்கு முடியாமைக்கு அது காரஓமாகியதுடன் அதில் அரச கட்டளைகளிலிருந்து அறவிடப்பட வேண்டிய வருமானத்தில் ரூபா 5,982,240 ஆன தொகை 2022 ஆம் ஆண்டினுள் அறவிடப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் திருத்தப்பட்ட குறைந்தபட்ச பெறுவனவு எல்லையான ரூபா 9,500,000 இணையும் மிகைத்து வருமானமொன்று பெற்றுக்கொள்ளப்பட்டுள்ள-தென தெரிவிக்கின்றென். | செயற்படல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| (இ) மாகாண நிதி விதி 378.2 பிரகாரம் முற்பண கணக்கிற்கு தொடர்புடைய தேறிய இலாபம் வருடாந்த வருமான மதிப்பீடுகளில் குறித்த வருமான விடயமொன்று காணப்படுமெனில் அவ் விடயத்திற்கும், ஏனைய அனைத்து சந்தர்ப்பங்களிலும் நானாவித வருமான விடயங்களுக்கும் செலவு வைக்கப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்படாது மீளாய்வாண்டு இறுதி திகதியில் மிகை மற்றும் பற்றாக்கறை கணக்கில் ரூபா 23,110,343 ஆன செலவு மீதி நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. | நிதி விதி 378.2 பிரகாரம் வணிக முற்பண கணக்கில் காசு மீதி 2021 ஆம் ஆண்டில் மாகாண சபைகள் நானாவித வருமான செலவின விடயத்திற்கு செலவு வைப்பதற்கு முடியாது போனதெனிலும் 2022 ஆம் ஆண்டின் முற்பணக் கணக்கின் தேறிய இலாபத்தில் ஏற்கக்கூடிய செலவினத்தினை தவிர்த்து எஞ்சிய இலாபம் குறிக்கப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கு அமைவாக மாகான சபை நானாவித வருமானம் செலவின விடயத்திற்கு செலவு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமென தெரிவிக்கின்றேன். | நிதி விதி பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

## 1.5.17 தலைப்பு 583 – மத்திய மாகாண விளையாட்டு திணைக்களம்

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மத்திய மாகாண விளையாட்டு திணைக்களத்திற்கு சொந்தமான காணி, உள்விளையாட்டு அரங்கம், நீச்சல் தடாகம், விளையாட்டு மைதானம், பிரதான பார்போர் கூடம் மற்றும் சாப்பாட்டு அறை மதிப்பிடப்பட்டு மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | பெறுமதிகள் மதிப்பீட்டு திணைக்களம் உடாக பெற்றுக் கொடுக்கப்பட்டவுடனே மாகாண விளையாட்டு திணைக்களத்திற்கு சொந்தமான சொத்துக்களின் கீழ் கணக்கிடப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமென தெரிவித்துக் கொள்கின்றேன். | அனைத்துச் சொத்துக்களும் மதிப்பிடப்பட்டு கணக்கிடப்படல் வேண்டும். |

### 1.5.18 தலைப்பு 584 – மத்திய மாகாண கிராம அபிவிருத்தித் திணைக்களம்

---

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| (அ) கிராம அபிவிருத்தி திணைக்களம் நடத்திச் செல்ப்படுகின்ற கட்டிடம் அமைந்துள்ள 0.0633 ஹேக்டேயார் காணியின் உரித்து குண்டசாலை பிரதேச செயலாளரினால் 2009 நவம்பர் 16 ஆந் திகதி அப்போதிருந்த கைத்தொழில் அமைச்சின் உதவி செயலாளரின் தனிப்பட்டபெயருக்கு பணிக்கப்பட்டிருந்ததுடன, குறித்த காணி 2022 மார்ச் 31 ஆந் திகதி வைரயிலும் திணைக்களத்திற்கு கையேற்கப்பட்டிருக்கவில்லை. | இந்த விடயத்திற்கு தொடர்புடையதாக திணைக்களம் தற்போது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன் எதிர்பாலத்தில் இது தொடர்பாக மேலும் தேடியறிந்து காணியின் உரித்தினை கையகப்படுத்திக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமென தெரிவித்துக் கொள்கின்றேன். | காணியின் உரித்தினை கிராம அபிவிருத்தி திணைக்களத்திற்கு கையகப்படுத்திக் கொள்ளல் வேண்டும். |
| (ஆ) மத்திய மாகாண கிராம அபிவிருத்தி திணைக்களத்தினால் பிரதேச ரீதியில் நடத்திச் செல்லப்படுகின்ற 12 பெண்கள் அபிவிருத்தி மத்திய நிலையங்களுக்கு சொந்தமான 08 சொத்துக்கள் விடயங்களுக்குரிய 707 அலகுகள் மதிப்பிடப்பட்டு மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | கிராம அபிவிருத்தி திணைக்கள பெண்கள் அபிவிருத்தி மத்திய நிலையத்திலுள்ள பொரட்களின் நிகழ்கால பெறுமதி மதிப்பிடுவதற்காக 2021 மார்ச் 22 ஆந் திகதி நியமிக்கப்பட்ட குழுவின் அறிக்கை 2022 மே 22 ஆந் திகதி திணைக்களத்திற்கு பெறப்பட்டிருந்தது. மூன்று மாவட்டங்களிலும் பெண்கள் அபிவிருத்தி மத்திய நிலையங்கள் 12 இல் 700 இற்கு அதிகமான அளவில் சொத்துக்கள் காணப்படுகின்றதுடன் தற்போது அச் சொத்துக்களின் அதிகளவு சிகாஸ் நிகழ்ச்சித் | சொத்துக்கள் மதிப்பிடப்பட்டு நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்படல் வேண்டும். |

திட்டத்திற்கு உள்ளடக்கப்பட்டு நிறைவு செய்யப்பட்டுள்ளது.

**1.5.19 தலைப்பு 591 – மத்திய மாகாண விவசாயத் திணைக்களம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) மத்திய மாகாண விவசாய திணைக்களத்தினால் 02 ஆண்டுகளை மிகைத்த ரூபா 1,517,861 ஆன 10 ஒப்பந்தக்காரர்களின் வைப்புக்கள் தொடர்பாக நிதி பிரமாணம் 571 பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | தற்போது இன்னுமாக ரூபா 2,032,643 ஆன தொகையொன்று வைப்புக் கணக்கில் காணப்படுகின்றதுடன் அதில் ரூபா 1,128,292 ஆன பிடிப்பணம் ஒரு ஒப்பந்தக்காரருக்கு சொந்தமானதாகும். அத் தொகையை விடுவிப்பதற்கு குறித்த நிறுவனம் விண்ணப்பித்து அதற்கான பரிந்துரை பெற்றுக் கொடுக்குமாறு நீரபாசண திணைக்களத்திற்கு கடிதமொன்று முன்வைக்கப்பட்டுள்ளது. எஞ்சிய தொகையில் ரூபா 514,782 ஆன பெறமதியையுடைய தொகைக்காக குறித்த பயனாளிகளிடமிருந்து விசாரித்த போதிலும் அதற்காக எந்தவொரு பதிலும் பெறப்படாமையினால் நிபி 571 பிரகாரம் அத் தொகை அரச வருமானத்திற்கு எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டதெனவும், மேலும் எஞ்சிய ரூபா 389,569 | காலம் சென்ற வைப்புக்கள் தொடர்பாக நிதி பிரமாணம் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| | ஆன பிடிப்பணம் 9 ஒப்பந்தக்காரர்களுக்குரியதுடன் அவை விடுவிப்பதற்கு பரிந்துரை பெற்றுக் கொடுக்குமாறு போரி நீர்பாசண திணைக்களத்திற்கு கோரிக்கை கடிதம் முன்வைக்கப்பட்டுள்ளது. | |
| (ஆ) சௌபாக்யா விவசாய அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் ரூபா 10,000,000 ஒதுக்கப்பட்டிருந்த கல்பாலம பயிர்நிலத்தில் இரு பசுமை இல்லங்கள் நிர்மாணிப்பதற்காக முன்வந்த ஒரே விலைமனு பொறியியல் மதிப்பீட்டினை பார்க்கிலும் 42.92 சதவீதத்தினால் அதிகரித்தமையினால் கட்டுமான பணிகள் கைவிடப்பட்டிருந்தது. இதற்காக மீண்டும் விலைமனுக்கள் அழைக்கப்படுவதற்கோ அல்லது பசுமை இல்லத்தின் அளவினை குறைப்பதற்கோ நடவடிக்கை எடுக்காமையின் காரணத்தினால் பண்ணைக்கு தேவைப்படுகின்ற பசுமை இல்லத்தின் தேவைப்பாட்டினை பூர்த்தி செய்துக் கொள்வதற்கு முடியாதிருந்தது. | ஒரு நிறுவனத்திலிருந்து மட்டும் முன்வைக்கப்பட்ட விலைகள் பொறியியல் மதிப்பீட்டினை பார்க்கிலும் 42.92 சதவீதத்தினால் அதிகமானதென்பதனால் ஒப்பந்தக்காரருடன் கலந்துரையாடி தள்ளுப்படி பெற்றுக் கொள்ளுமாறு பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. இது தொடர்பாக விசாரிக்கப்பட்ட போதிலும் திருத்தம் மேற்கொள்ள முடியாதென ஒப்பந்தக்காரர் தெரிவித்துள்ளார். ஒரு நிறுவனம் மட்டும் விலையை சமர்ப்பித்திருந்தமையினால் போட்டி விலை முன்வராமை மற்றும் பொறியியல் மதிப்பீட்டினை பார்க்கிலும் 42.92 சதவீதத்தினால் அதிகமெனில் மற்றும் மீண்டும் விலைகள் அழைக்கப்பட்டு குறித்த கட்டுமானம் மேற்கொள்வதற்கு காலம் போதுமானதாக இன்மையினால் குறித்த கட்டுமானத்தினை கைவிடுவதற்கு திணைக்களத்தின் பெறுகைகள் குழுவினால தீர்மானிக்கப்பட்டது. | நிதியேற்பாடு ஒதுக்கப்பட்டிருந்த நோக்கங்கள் நிறைவேற்றப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |